Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 29 புதன்கிழமை (11.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 194

சீமாட்டி புடவைக்கடல்




அனைத்து ரக புடவைகளினதும் மொத்த சில்லறை வியாபாரிகள்
Dealers in Textiles
& Fancy Goods




இல. ஐஐ, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல - 0212228564, பக்ஸ் - 0212222102
(C/1408)




16




04




11





17




15

# குணரட்ணம் நாடுகடத்தல்

## விதிகளை மீறியதால் வினை



(கொழும்பு)

கொழும்பில் கடந்த ஆறாம் திகதி முதல் காணாமல் போய் விட்டதாகக் கூறப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிறேம்குமார் குணரட்ணம் நேற்று முன் தினம் இரவு பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். வாகனம் ஒன்றில் ஏற்றிவரப்பட்ட தான் கொழும்பு தெமட்டகொட பகுதியில் இறக்கிவிடப்பட்டதாகக் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார். இவரிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொண்ட பின்னர் இவரை பொலிஸார் விடுவித்தனர். பின்னர் இவருடன் தொடர்பு கொண்ட அவுஸ்ரேலியத் தூதரகத்தின் அதிகாரிகள், இவரை அழைத்துச் சென்று நலம் விசாரித்தனர். பின்னர் இவரை அவுஸ்ரேலியாவுக்கு அனுபபிவைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர். இவர்களுடன் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் இணைந்து பணியாற்றினர்.

நேற்று அதிகாலை இவர் விமானநிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவுஸ்ரேலியாவுக்குப் பயணமானார். நொபஸ் முதலிகே என்ற பெயரில் அவுஸ்ரேலிய பிரஜா உரிமைபெற்றுள்ள இவரை சட்டப்படி நாட்டைவிட்டு கடத்தியதாக அதிகாரிகள் இப்போது அறிவித்துள்ளனர். இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட அதேவேளை, இக்கட்சியின் சர்வதேச அணியின்

19 ஆம் பக்கம் பார்க்க

## புத்தாண்டில் மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. சம்பள உயர்வைக் கோரி ஒன்றிணைந்த மின்சார சேவையாளர் சங்கம் என்ற பெயரில் சிலரினால் தொழிற்சங்க நட்வடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது.

இன்றைய தினம் இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், புத்தாண்டு காலத்திலோ இன்றைய தினமோ தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாதென இலங்கை மின்சார சபையும், இலங்கை தனியார் மின்சார சபையும் தெரிவித்துள்ளன.

## தனியான மேதினப் பேரணி இடதுசாரிகள் முஸ்தீபு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகள் தனியாக மேதினக் கூட்டத்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளன. நாரஹேன்பிட்டி ஷாலிகா மைதானத்தில் ஆரம்பமாகும் மேதினப் பேரணி, கிருலப்பனை மைதானத்தில் நிறைவடையுமென லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார்.

லங்கா சமசமாஜ கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை முன்னணி ஆகிய இடதுசாரி கட்சிகளே கூட்டாக இணைந்து மேதினக் கூட்டத்தை நடாத்தத் திட்டம்

19 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத இந்தியப் பிரஜைகள் மீது வலைவீச்சு

சட்டவிரோதமாக வடக்கு மற்றும் கிழக்கில் தங்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தும் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது. விசா இன்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று பல்வேறு துறைசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் 500 இற்கும் மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் தொடர்பில் அம்மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறான இந்திய பிரஜைகள் மூவர், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து கைது செய்யப்பட்டதை அடுத்தே மேற்படி தகவல்

19 ஆம் பக்கம் பார்க்க

## சம்பள உயர்வு

இலங்கை போக்குவரத்து சபையின் சகல ஊழியர்களதும் அடிப்படைச் சம்பளம் 3,300 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. கடை நிலை ஊழியர்களைத் தவிர்ந்த ஏனைய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு முரண்பாடு இல்லாத வகையில் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. சம்பள உயர்விற்காக அரசாங்கம் 327 பில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. இந்தச் சம்பள உயர்வு இம்மாதம் முதல் அமுலுக்கு வருகிறது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வீதி திருத்தத்தில் குளறுபடி

(கொழும்பு)

வலி. மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சுழிபுரம் பத்திரகாளி அம்மன் வீதியானது முழுமையாகத் திருத்தப்படாமல் உள்ளது. பிரதேச சபையினால் சபை நிதியின் கீழ் 15 இலட்சம் ரூபா செலவில் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் வீதியானது திருத்துவதற்காக நிதி ஒதுக்கிடப்பட்டது. ஆனால் அதனை முழுமையாகத் திருத்தம் செய்யாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க



புத்தாண்டு புடவை வியாபாரம் யாழ். நகரில் மட்டுமல்ல புறநகர்ப் பகுதிகளிலும் களைகட்டியுள்ளதை காணலாம் (படம் - சதீஸ்)

## கல்வி நிலையங்களுக்கு புதிய கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்களை மாலை 6 மணிக்குப் பின்னர் திறந்துவைப்பதற்கு இனிமேல் அனுமதிக்கப்படமாட்டாது என யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். கலாச்சாரச் சீர்கேடுகள் மற்றும் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்தும் விஷேட கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மாணவர்களிடையே ஆன்மீக ஈடுபாடு இல்லாமல் போய்விட்டது. எனவே வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை

19 ஆம் பக்கம் பார்க்க

## கடலில் மூழ்கி வயோதிபர் மரணம்

### மாதகலில் விபரீதம்

கடற்கரைக்குக் குளிக்கச் சென்ற வயோதிபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு மாதகல் கடற்கரைக்கு நண்பருடன் குளிக்கச் சென்ற சில்லாலையைச் சேர்ந்த இ.இம்மானுவேல் (வயது - 65) என்ற வயோதிபரே குளித்துக்கொண்டிருக்கும்போது தனது மார்பகப் பகுதியை அழுத்திப் பிடித்தவாறு காணப்பட்ட வேளை தூர இடத்தில் நின்ற நண்பர் அவ்விடத்திற்கு வருவதற்கு இடையில் மயங்கிவிழுந்து நீரில் மூழ்கியுள்ளார்.

குறித்த வயோதிபர் மது அருந்திய நிலையில் குளிக்கச் சென்றதாக அவரது நண்பர் தெரிவித்தார். அதேவேளை, நண்பர் கடற்படைக்குத் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து கடற்படையினர் சடலத்தைக் கடலில் இருந்து வெளியே எடுத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு இளவாலைப் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தினை சங்கானை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# கிராம அலுவலர்கள் நியமிக்கப்படாமையால் பொதுமக்கள் சிரமம் தொடர்கிறது

## வடமராட்சி கிழக்கில் அவலம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 16 கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையாக மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ளது.

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்படாத காரணத்தினால் நாகர்கோவில் தெற்கு சுண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் குடியேற்றப்படவில்லை. 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 8 வரையான கிராம அலுவலர்களே பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடமையாற்றினாலும், மக்களுக்குப் பூரணமாகச் சேவையாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் தமது தேவையின் நிமித்தம் கிராம அலுவலர்களிடம் செல்லும் மக்கள் ஒரே நாளில் தமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

கடந்த காலப் போர் நடவடிக்கைகளினால் 13 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தனர். மற்றைய 5 பிரிவுகளில் இருந்தும் கணிசமான குடும்பங்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த பின்னர் இவர்களின் தேவைகள் அதிகம். அதைவிடப் பல்வேறு பதிவுகளை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும். இதனால் கிராம அலுவலர்களுக்குச் சுமைகள் கூடும் அதேவேளை, மக்கள் தமது கருமங்களை உரிய வேளைகளில் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

இப்பிரதேசத்தில் ஆழியவளை, உடுத்துறை கிராம அலுவலர் பிரிவுகளிலேயே கூடுதலான குடும்பங்கள் வசிக்கின்றனர். இரு பிரிவுக்கும் ஒருவரே கடமையாற்றப் பணிக்கப்பட்டுள்ளனர். ஒருவரால் கூடுதலான குடும்பங்கள் உள்ள இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

ஆகவே 53 கிலோ மீற்றர் நீளமான 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீளக்குடிமயர்ந்த மக்களின் தேவைகள் நலன்களைக் கவனிப்பதற்கு மேலதிகமாக கிராம அலுவலர்களை நியமிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# கர்ப்பவதி பெண்களுக்கு அன்பளிப்பு வழங்கல்




தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியாசாலையில் இடம்பெற்ற கர்ப்பவதிப் பெண்களுக்கான உபசரிப்பு வைபவமும் அத்துடன் அவர்களுக்கான அன்பளிப்புப் பொருட்களும் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த வைபவத்தில் கலந்து கொண்ட 46 கர்ப்பவதி பெண்களுக்கும் 14 குடும்ப நல ஆரோக்கிய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவருக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் இருவருக்கும் கௌரவிப்புடன் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கர்ப்பவதி பரிசோதனை வைத்திய அதிகாரியும் மற்றும் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் பொறுப்பாகவுள்ள வைத்திய அதிகாரியும் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்தும் நான்கு வைத்திய அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இசைத்தட்டு வெளியீடு




(தீவகம்)

சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் பக்திப்பாடல் இசைத்தட்டு வெளியிடப் படவுள்ளது.

நெடுந்தீவு முகிலனின் வரிகளில் இசைப்பிரியனின் இசையில் வெளிவரவுள்ள பாடலை எஸ்.ஜி. சாந்தன், கேசவன் மற்றும் சாகித்தியா ஆகியோர் பாடியுள்ளனர். நெழுவினி சித்திவிநாயகர் புகழையும், நெடுந்தீவு மக்களின் வாழ்வையும் சித்தரிக்கும் வகையில் பாடல் வரிகள் அமைந்துள்ளன.

அன்றைய தினம் இவ்வாலயத்தில் புதிய தேர் வெள்ளோட்டம் நிகழ்வும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சப்பறம் வெள்ளோட்டம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புதிய சப்பற வெள்ளோட்ட விழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை இரவு விநாயகப் பெருமான் புதிய சப்பறத்தில் வீதியுலா வரும் காட்சியும், புதுவருட தினமான வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10)

# வைத்தியசாலை புனரமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு புனரமைக்கப்பட்டு வருகின்து.

பழமையான சுண்ணாம்புக் கட்டடத்தில் இயங்கிவரும் இவ் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு நீண்டகாலமாக புனரமைப்பு இன்றி இயங்கி வந்தது.

தற்சமயம் இப்பிரிவின் தரைப் பகுதிக்கு மாபிள் பதிக்கப்பட்டு சுவர்களுக்கு வர்ணப்பூச்சு பூசப்பட்டு வருகின்றது. படிப்படியாக வெளிநோயாளர் பிரிவின் அனைத்து விடுதிகளும் இவ்வாறு புனரமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்டு வருகின்றது. (பா)

# வீதி விபத்தில் இருவர் காயம்

(திருநெல்வேலி)

கல்வியங்காடுப் பகுதியில் நடைபெற்ற இரண்டு விபத்துச் சம்பவங்களில் இரண்டு பெண்கள் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டப்பிராயைச் சேர்ந்த சுமார் 55 வயது மதிக்கத்தக்க இப் பெண் துவிச்சக்கர வண்டியொன்றில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார். கல்வியங்காடு-பருத்தித்துறை வீதி புதிய செம்மணி வீதிச் சந்தியில் நேற்றுப் பகல் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. காயத்துக்குள்ளான இவர் போதனா வைத்தியசாலையில் உடன் அனுமதிக்கப்பட்டார்.

மற்றுமொரு கர்ப்பிணியான இளம் பெண் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகி நிலத்தில் வீழ்ந்ததில் சிறு காயங்களுக்குள்ளானார். இவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.(137)

## சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்.இந்து சைவபோசன, மூன்று கிரகபாவம் 28 உடைய அரச உத்தியோகம் பார்க்கும் 34 வயதுடைய சுவாதி 4ஆம் பாதம் உடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. முதல் தடவையில் சகல விபரத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு: விளம்பர இல: 05, மே/பா: தினமுரசு, 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/1553)

---

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)

---

### கணினி திருத்தம்

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)

# “வாழ்க்கைப் பயணம்” சிறுகதை தொகுப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முருகேசு ரவீந்திரனின் ‘வாழ்க்கைப் பயணம்’ என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகப் போதனாசிரியர் த.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை கமநல சேவைகள் திணைக்கள முன்னாள் உதவி ஆணையாளர் நா.குழந்தைவேலு, சிறப்புரையை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய ஆசிரியர் த.சத்தியபாலன், நூல் வெளியீட்டுரையை யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியர் பா.சண்முகநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். இந்நூலுக்கான ஓவியங்களை வரைந்த தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கயிலாசநாதன் கௌரவிக்கப்படவுள்ளார்.

தொடர்ந்து நூலுக்கான ஆய்வுரையை யாழ்.கல்வி வலய தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# இறால் பிடிப்பதற்கு ஆனையிறவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு கடல் நீரேரியில் இன்று முதல் இறால் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் பத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்பகுதியில் இறால் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே இவ்வருட முற்பகுதியில் குறித்த கடல் நீரேரியில் நாறா நிறுவனம் இறால் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இறால் குஞ்சுகளை விட்டிருந்தது. இவை மூன்றரை மாதங்களில் முதிர்ச்சியடைந்து சந்தைப்படுத்தும் தரத்தை அடைந்திருப்பதனை அடுத்து இறால் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு, பாணாவிடைசிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (10)

# உடுவில் பிரதேச சமுர்த்தி சந்தை

(உடுவில்)

உடுவில் பிரதேச சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் திவிநெகும திட்டத்தின் கிழ் புத்தாண்டையொட்டி மக்கள் சந்தை நேற்று இணுவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு அருகாமையில் கூடியது. உடுவில் பிரதேச சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் தலைமை முகாமையாளர் திருமதி எஸ்.குமுதினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் புதுவருடச் சந்தையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, கிராம அபிவிருத்தி அலுவலர் கே.பஞ்சலிங்கம் மற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்தையில் சமுர்த்தி வங்கிகளிடம் கடன்பெற்று தொழில் முயற்சியை மேற்கொண்டவர்களின் உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மரக்கறி வத்தல் வகைகள் உட்பட மரக்கன்றுகள் கைப்பணிப் பொருட்கள் எனப் பல பொருட்களும் சந்தைப்படுத்தப்பட்டு விற்பனையும் இடம்பெற்றன.

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.

-கார்ல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வாழப் பிறந்த மனிதர்கள் தானா நாம்?

பிறரிடம் நமக்குப் பிடிக்காத குணங்களே பெரிதாகத் தெரிகின்றன. நம்மால் சகித்துக்கொள்ள முடியாதளவிற்கு அவர்களது பிழைகள் எல்லாம் நமக்குப் பெரிதாகத் தெரிகின்றன. அவையே திரும்பத் திரும்ப நமக்கு நினைவூட்டப்படுவதால், அது பற்றிய ஆவேசத்தில் நம் தவறுகள் நம் நினைவில் வருவதேயில்லை.

நமக்குத் தெரியாதவை அறியாதவை பற்றியெல்லாம் நினைவில் வருவதில்லை ஆதலால், நம் நினைவிலுள்ள மற்றவர்களின் பிழைகளே நமக்குப் பிழைகளாகத் தெரிகின்றன. நாமும் தவறுகள் செய்திருக்கிறோமா அநீதிகள் செய்திருக்கிறோமா மற்றவர்கள் துன்பப்படவும் அச்சப்படவும் செய்திருக்கிறோமா என்பதெல்லாம் பற்றி நாம் யோசிப்பதேயில்லை.

அப்படி ஏதாவது யோசிக்கும்படி ஆகிவிட்டால் கூட, நம்மைவிட மற்றவர்கள் செய்ததே ஆகப்பெரும் கொடூரம் என்று சமாதானம் செய்துகொண்டு அந்த சங்கடமான நினைவுகளை விலக்கி விடுகிறோம். அவர்கள் ஆயிரமாயிரமாய்க் கொலை செய்தார்கள்; நாம் சில நூறுதானே செய்திருப்போம் என்கிற குரூர நியாயத்திற்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம்.

அதனால்தான் எந்த உறுத்தலுமில்லாமல் நாம் மற்றவர்கள் செய்த கொலைகளைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடிகிறது. அந்தக் கொடூரக் குற்றவாளிகளோடு சமதையாக நமக்கென்ன பேச்சு என்ற இறுமாப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்க முடிகிறது. நாம் குற்றமற்றவர்கள் என்று நாமாக வளர்த்துக்கொண்ட எண்ணம், மற்றவர்களோடு இணங்க முடியாத அகங்காரிகளாக்கி விடுகிறது நம்மை!

ஒன்பது அப்பாவிகளைக் கொலை செய்தவனோடு ஒப்பிட்டால் ஒரு அப்பாவியைக் கொலை செய்தவன் குற்றவாளி இல்லை என்று சொல்லிவிடலாமா? ஒன்று செய்தவன் ஒன்பது செய்தவனைக் குற்றம் சாட்டுவது போல, ஒன்பது செய்தவனுக்கும் குற்றம் சாட்ட உலகளாவியதாய் ஒரு லட்சம் கொலைகளைச் செய்தவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

"சீஸரின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவள்" என்பது போல நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட புனிதப்படுத்தலே, மற்றவர்களோடு பேச முடியாதவர்களாக இணக்கம் காண முடியாதவர்களாகச் செய்துவருகிறது நம்மை! நாம் மட்டுமே பெரிதாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற கொடியை உயர்த்திப் பிடித்தபடி அந்தக் கட்டைகளால் மற்றவர் தலைகளில் ஓங்கி அடித்தபடி இருக்கிறோம் – இஸ்ரேலியர்கள் போல!

நாம் செய்ததெல்லாம் அவர்கள் செய்ததற்குப் பதில்தான் என்றும் எங்களது தற்காப்புக்கானது என்றும் நியாயப்படுத்திக் கொள்கிறோம். அதுபோன்ற நியாயங்களெதையும் அவர்களும் வைத்துக்கொண்டிருந்தால் அதில் கொஞ்சமும் நியாயமில்லை என்று நாங்களாகவே நினைத்துக் கொள்கிறோம்.

இதுபோன்ற ஒருபக்கச் சிந்தனைகளோடு, இருதரப்புச் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினைக்குத்தான் தீர்வு காணமுடியும்? மறுதரப்புச் சொல்வதைக் கேட்க விரும்பாமலே, பாதிக்கப்பட்டிருப்பது நாங்களே, எனவே நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும், நாங்கள் கேட்பதைத்தான் தர வேண்டும் என்று நாண்டு நிற்பது, ஒரு தரப்பை அழித்தோ அடிமைப்படுத்தியோதான் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட குகைமனிதர் காலத்து வழிமுறையல்லவா?

பகை நிறுத்தி சமாதானமாக வாழ விரும்பும் மனிதர் செய்ய வேண்டிய காரியங்களைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோமா? பேசிக்கொண்டிருக்கிறோமா? - ஆசிரியர்

# சோகங்களை சுமந்து கொண்டு புத்தாண்டு கொண்டாடும் நிலை

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக மக்கள் சோகங்களைச் சுமந்துகொண்டு சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடவேண்டியதொரு மோசமான நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது இந்நிலை சித்திரைப் புத்தாண்டுடன் முடிவடையாது, நத்தார் பண்டிகை மற்றும் அடுத்த புதுவருடம்வரை மக்களுக்குப் பெரும் துன்பத்தை ஏற்படுத்தப் போகின்றது.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் ஹரின்பெர்னாண்டோ.

பொருளாதாரப் பெரும் சுமையால் வாழ்வதறியாது திண்டாடித்திரியும் மக்கள்மீது கரிசனை கொண்டு அவர்கள் மீது ஏற்றிவைத்த சுமையை இறக்கிவைக்காது, தனது செயல்களை நியாயங்கள் கூறி மூடிமறைக்கவே அரசு முயற்சிதது வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசு, மக்கள் மீது ஏற்றிவைத்துள்ள பொருளாதார பெரும் சுமையால் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். வியாபாரிகள், விவசாயிகள், ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் பொருளாதார ரீதியில் மட்டுமல்லாது வாழ்வியலிலும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

புத்தாண்டு என்பது மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்துவதாக அமையவேண்டும். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளின்படி சித்திரைப் புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்கமுடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அபாயநிலை இந்த சித்திரைப் புத்தாண்டுடன் முடிவடைந்துவிடாது. வருகின்ற நத்தார் பண்டிகை, அடுத்த புதுவருடம் வரையில் உக்கிரமுடன் கூடிய பெரும் தாக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்தும். அந்தளவிற்கு மகிந்த அரசின் பொருளாதார நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

மக்கள் மீது பெரும் சுமையை ஏற்றிவைத்த மகிந்த அரசு, அதனை இறக்கிவைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்காது, தனது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு முயற்சித்து, பொறுப்புணர்வற்ற முறையில் கருத்து வெளியிடுவதானது எமக்கு மிகவும் கவலையளிக்கின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அனிஞ்சியன்குளப் பகுதியில் திடீர் மினி சூறாவளி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் 2ஆம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் 9 மணிவரை திடீரென மழையுடன் கூடிய மினிசூறாவளி ஏற்பட்டுளளது.

இதனால் இப்பகுதியில் வாழ்நது வந்த 27 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் சிலர் அனிஞ்சியன்குள பாடசாலைகளிலும் சிலர் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்களுக்கு சமைத்த உணவுகளை முல்லைத்தீவு மாவட்ட உதவி அனர்த்த முகாமைத்துவ நிலையம் வழங்கி வருவதுடன் IOM நிறுவனம் தறப்பாள்களை வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மக்களுக்கான உதவிகளை பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குவதாயின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## தொலைபேசிக் கடையில் திருட்டு: 3 சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலை - மாம்பழம் சந்தியில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து அங்கிருந்து பெறுமதியான பொருட்களை களவாடினார்கள் என்ற சந்தேகத்தில் மூன்று இளைஞர்கள் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இக்களவுடன் சம்பந்தப்பட்ட ஏனைய இரு இளைஞர்களையும் தேடி பொலிஸார் வலை விரித்திருப்பதாக யாழ்.பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது. அரியாலை - மாம்பழச்சந்தியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இர்வு கையடக்க தொலைபேசி விற்பனை நிலையமொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து 18 கையடக்க தொலைபேசிகள், 2 கமராக்கள், 2 சி.டி பிளேயர்கள், ஒரு தொகுதி கிட்காட் என்பன களவு போயுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களிடமிருந்து 8 கையடக்க தொலைபேசிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அரியாலைப்பகுதியைச் சேர்ந்த இந்த 3 இளைஞர்களையும் விட திருகோணமலை மற்றும் பளைப் பகுதியைச் சேர்ந்த மேலும் இரு இளைஞர்களையும் தேடி பொலிஸார் வலை விரித்திருப்பதும் தெரியவருகின்றது. அவர்கள் இருவரும கைது செய்யப்பட்டதும் ஐந்து பேரையும் யாழ். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)

## குடிசன மதிப்பீட்டில் முல்லைத்தீவு முதலாமிடம்

(முல்லைத்தீவு)

குடிசன மதிப்பீட்டு விபரங்களை பூரணமாக சமர்ப்பித்த மாவட்டங்களில் அகில இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டம் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளதாக முலலைத்தீவு மாவட்ட புள்ளி விபரத் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 1981ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் மேற்படி குடிசன மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் முன்னெடுக்கப்படாது இருந்தது.

இந்த வருடம் இக் கணிப்பீட்டுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு குறித்த காலப்பகுதிக்குள் தொகை மதிப்பீடு தொடர்பான சகல விபரங்களை முல்லைத்தீவு மாவட்டம் முழுமையாக சமர்ப்பித்துள்ளதாகவும். இந்த நிலையில் அகில இலங்கையில் இம்மாவட்டமே இறுதிக் கணிப்பீட்டின் பின் முதலாமிடத்தைப் பெற்றுள்ளதாக திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

## புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள் விற்காத வணிக நிலையங்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

புகையிலை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யாத வணிக நிலையங்கள் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி கௌரவிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ;தோறும் புகையிலை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யாத வணிக நிலையங்கள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மே 31ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச புகைத்தல் தினத்தன்று இவ் வணிக நிலையங்கள் கௌரவிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே யாழ்.பிராந்திய சுகாதார சேவை பணிமனையினால் இவ்வாறு புகையிலைசார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யாத வணிக நிறுவ்னங்கள் யாழ்.பொது நூல் நிலைய மண்டபத்தில் கௌரவிக்கப்படவிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்.குடாநாட்டில் புகையிலைசார் உற்பத்திப் பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்துவதனால் புற்றுநோய்த்தாக்கம் வெகுவாக அதிகரித்து வருவதனால் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இவவாறு யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம இந் நடவடிக்கையை எடுத்துள்ளது.

தொடர்ந்து புகையிலையை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதனையும் பயன்படுத்துவதனையும் கட்டுப்படுத்துமுகமாக விழிப்புணர்வு நடவடிகைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)

# பிரதேச அபிவிருத்தி வாய்ப்புக்களை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்





(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக நடைபெறுகின்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை மக்கள் அமைப்புக்கள் தங்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்திக்கான சரியாான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கி கருத்துத்தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் குறித்த பிரதேசத்தின் அனைத்துத் துறை சார்ந்த அபிவிருத்திகளையும் நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிறது. இங்கு துறைசார்ந்த அனைத்து திணைக்களங்களின் உயரதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் என அனைவரும் சமூகமளிக்கின்றமையால் இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் சரியான முறையில் பயன்படுத்தி தங்களுடைய பிரதேசத்தின் தேவைகள் பிரச்சினைகள் மக்களின் வாழ்வாதார மேம்பாடு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் உள்ள தேவைகளை எடுத்துக் கூறி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

மேலும் அபிவிருத்தித் திட்டங்களை இயன்றவரை மக்களின் நலன்களையும் தேவைகளையும் கருத்தில் எடுத்து விரைவாகவும் நேர்த்தியாகவும் முடிக்கப்பட்டு மக்களின் பயன் பாட்டுக்கு வழங்கவேண்டும். அத்தோடு மீள்குடியேறிய பிரதேசங்களுக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களும் கூடிய அக்கறை எடுத்து பொறுப்புடன் செயற்பட வேண் டும் அப்போதுதான் குறித்த திட்டங்கள் முழுமையான பயனைப் பெறும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் உதவித்திட்டப் பணிப்பாளர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி,டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான ஜீவன் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா உள்ளிட்ட திணைக்களங்களின் உயரதிகாரிகள் பாதுகாப்புத்தரப்பினர் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த முகாமைத்துவம் தொண்டர்களுக்கான கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோர கிராம அனர்த்த முகாமைத்துவ தொண்டர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 15 கிராமங்களைச் சேர்ந்த தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் றீட் நித்தியானந்த குலாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ தயார்ப்படுத்தல் அனர்த்தத்தை எதிர்கொள்ளல், அனர்த்தம் ஏற்பட்டால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப் பட்டது. இதேவேளை இக்கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ தொண்டரகளுக்கு அடையாள அட்டை வழங்கவும தீர்மானிக் கப்பட்டது. (04)

# திராட்சைப் பழச்செய்கை யாழ்.விவசாயிகள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

அமைதியான சூழ்நிலை காரணமாக திராட்சைப் பழங்களுக்கு யாழ்ப்பாணத்தில் சிறந்த சந்தை வாய்ப்புக் காணப்படுகின்றது. இதன் பலனாக பல விவசாயிகள் மீண்டும் திராட்சைச் செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இளவாலை,விளான் மற்றும் பெரிய விளான் போன்ற பிரதேசங்களில் திராட்சைச் செய்கையானது பெரியளவில் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்... கூடிய கவனம் எடுத்துவ கின்றார். ஆளுநர் இத்தோட்...ருக்கு அவரது பாரியார் ஜி.என் சந்திரசிறியுடன் விஜயம் மேற்கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். விவசாயிகளின் வேண்டு கோளுக்கிணங்க முதல் அறுவடையை அவரது பாரியாருடன் இணைந்து ஆரம்பித்து வைத்தார். இவ்விஜயத்தின் போது யாழ் மாவட்ட உதவி கமநல சேவைகள் ஆணையாளர் பற்றிக் டிறஞ்சனும் உடனிருந்தார்.

# புனரமைக்கப்பட்ட கட்டடங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் -வடமராட்சி மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட பல கட்டடங்கள் பூரணமான வேலைகள் முடிவடைந்த நிலையில் இன்னமும் திறந்து வைக்கப்பட்டு இயங்காமையினால் இப்பிரதேச மக்கள் தமக்குரிய தேவைகளைப் பெற முடியாத நிலையிலுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (என்றெப்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலகம், மிருகவைத்தியர் அலுவலகம், மனநல ஆற்றுகை நிலையம், வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை கிளை நிலையங்கள் ஆகியனவும்

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம், உடுத்துறை ஆரம்பசுகாதார நிலையம், பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன் பற்று உப அலுவலகம், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கட்டடம் ஆகியனவும் திருத்தி அமைக்கும் வேலைகள் யாவும் முடிவடைந்த நிலையிலும் இக்கட்டடங்கள் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படாமையினால் இப்பிரதேச மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஆகவே இப்பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, புனரமைப்பு செய்யப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத் இயங்க ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# சாதாரணதர பெறுபேறுகள்

(கோண்டாவில்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய 2012ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பெறுபேறுகள்

உ.பகீதரன் 4ஏ பி 2சி 1எஸ்,
ஸ்ரீ.பவோனுஜன் 2ஏ 5பி 1சி 1எஸ்,
அ.பிறிஞ்சினா 2ஏ 1பி 1சி 4எஸ்,
அ.ராம்டினாத் 1ஏ 2பி 3சி 2எஸ்,
தே.விஜிதரன் 1ஏ 4சி 4எஸ்,
க.விதுர்ஷனா 1ஏ 1பி 1சி 5எஸ்,
வ.ஜிந்துசன் 2பி 3சி 4எஸ்.


# அழகியல் பாடத்தை கற்பிப்பதில் சிரமங்களுக்குள்ளாகும் ஆசிரியர்கள்

(துணுக்காய்)

கடந்த வருடம் வன்னிப்பகுதிக்கு நியமனம் பெற்ற அழகியல் பாட பட்டதாரி ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி மிகவும் மன வேதனை அடைந்தவர்களாக காணப்படுகின்றனர்.

அழகியல் பாட பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆசிரிய நியமனம் கடந்த வருடம் யூலை மாதம் 400இற்கு மேற்பட்ட தமிழ் பட்டதாரிகளுக்கு சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், சித்திரம ஆகிய பாடங்களுக்காக வழங்கப்பட்டது.

இவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் யாழ்.மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்டது. ஏனைய அனைவருக்கும் வன்னி மாவட்டங்களுக்கே நியமனம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு இரு மாதங்களுக்கு முன்பே கல்வியல் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் மூலம் வன்னிப்பகுதியில் காணப்பட்ட அழகியல் பாட ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன. அவ் அழகியல் பட்டதாரி நியமனங்கள் மூலம் மேலதிக அழகியல் ஆசிரியர்களை வன்னிப்பகுதிக்கு வழங்கியுள்ளது. இதனால் பாடசாலைகளில் நேர சூசிகளைப் பெறுவதில் இவ் ஆசிரியர்கள் இடையூறுகளை எதிர் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அழகியல் பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு வன்னிப் பகுதிகளில் ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் இவர்கள் இப்போது ஏனைய பாடங்களினை கற்பித்து வருகின்றனர். இது இவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. (42)



**கிளிநொச்சி - டிப்போ சந்தியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடம் எதுவித வசதிகளுமற்று காணப்படுகின்றது.**

**இவ்விடத்தில் பயணிகள் தங்குவதற்கான பேருந்து கொட்டகைகள் எதுவும் இல்லை அதனால் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து மக்கள் தமது பயணங்களை தொடர்கின்றனர். (படம்- ஜெ.கலையகன்)**

# ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கிமாலயா கிரியேஷன் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினால் சினிமா, கலை, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆர்வமுள்ள குறும்படங்களை உருவாக்கும் கலைஞர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி நடாத்தப்படவுள்ளது.

இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

# நாட்டிய நாடகப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலை அலுவலர்கள் அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக்கழகத்தின் அரச நடன மற்றும் நாட்டிய நாடகக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள அரச நாட்டிய நாடக நடனப் போட்டிக்கு (2012) தமிழ், சிங்கள மொழி மூலம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சுற்று நிருபம் என்பன கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அல்லது மாவட்டச் செயலகம், பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்றுக்-கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட நாட்டிய நாடகப்போட்டி விண்ணப்பங்களை செயலாளர் அரச நடன மற்றும் நாட்டிய நாடகக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆவது மாடி, செத்சிறிபாய பத்திர முல்ல. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் நிரப்பப் பட்ட நடனப் போட்டி விண்ணப்பப்படிவங்களை அருகில் உள்ள மாவட்ட பிரதேச செயலக கலாசார பிரிவில் கையளிப்பதுடன் இரு விண்ணப் பங்களையும் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 3 கிராம அலுவலர் பிரிவுகளில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராம மக்களே தமக்கு குடிநீர் மலசல கூடம், வட்டுத்திட்டம், வைத்திய சேவைகள் உள்ளிட்ட பல அடிப்படை வசதிகள் இல்லாமையால் தாம் நாளாந்தம் சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்கள் மீள்குடியேறிய 3 மாதங்கள் கழிந்துள்ள நிலையில் இக்கிராமத்திலுள்ள 6 கிணறுகள் திருத்தியமைக்கப்படவில்லை. மலசல கூட வசதிகள் இல்லை.

20 மாணவர்களுடன் முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாமர நிழலின் கீழ் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

வைத்திய வசதிகள் இன்மையே பாரிய பிரச்சினையாகவுள்ளதாகவும், தாம் சிகிச்சைக்காகக் கொக்கிளாய் கிராம வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும், இதனால் அவசர நோய் என்றால் தாம் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் உள்ளூர் வீதிகளும் மணல் வீதியாகவே காணப்படுவதால் போக்குவரத்துக்கள் இவ்வீதியூடாக முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டும் மக்கள் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அடிப்படை வசதிகளைப் பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## கும்பாபிஷேகம்

(அரியாலை)

மண்டைதீவு அருள்மிகு வேப்பந்திடல் மகா முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் திருப்பணிகள் துரிதமாக நடைபெற்று வரும் நிலையில் குடமுழுக்கு மற்றும் சங்காபிஷேகம் போன்ற நைமித்திய பூசையைத் தொடர்ந்து வருடாந்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (23)

# போசாக்கு மேம்பாடு; கர்ப்பிணிகளுக்கு கருத்தரங்கு

(வடமராட்சி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினரால் கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கான போசாக்கு மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.


மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மேற்பட்டோருக்கு இந்தக் கருத்தரங்கு குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளராக சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தயாபரன், மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர் எஸ்.சூரியகாந்தி கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் நிறைபார்க்கும் மையங்களில் குழந்தைகள் மற்றும் கர்ப்பவதிகள் நிறையை மாதாமாதம் கணித்துப் போசாக்கு நிறையைக் கண்டறிதலும் ஒவ்வொரு நிலையங்களில் தாய்மார் கழகங்களை உருவாக்கி அதனூடாக வீட்டுத்தோட்டம் அமைத்து போசாக்கான உணவுப் பயிர்களை வளாத்து உண்ணல் மற்றும் கோழி வளர்ப்பு போன்றவற்றையும் ஊக்குவித்து போசாக்கைக் கடைப்பிடித்தல் போன்ற கருத்துரைகளும் வழங்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் கிராம அலுவலர்கள், மிருக வைத்தியர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (116)

# காரைநகரில் விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்ட விதை வழங்கல்



(காரைநகர்)

திவிநெகும தேசிய இயக்கம் 2012 சிறுபோகத்தில் விதைகள் மற்றும் பயிர்கள் நடும் ஆரம்ப நிகழ்வு கடந்த 5ஆம் திகதி 9.10 மணியளவில் காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஜே/47 கிராம சேவையாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் தேவநந்தினி பாபு, காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் காரைநகர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான வி.கண்ணன் தென்னிந்திய திருச்சபையின் வணபிதா, கமலக்குமாரன் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனா.

இவ்விழாவில் வி.கண்ணன் உரை நிகழ்த்துகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்படுகின்ற "திவிநெகும்" திட்டத்தின் மூன்றாவது கட்டமாக இந்நிகழ்வானது இடம் பெறுகின்றது. நாட்டு மக்களின் வாழ்வாதாரச் சுமையினை தீர்ப்பதற்காக ஜனாதிபதியின் எண்ணத்தில் உதித்த இத்திட்டமானது வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவிப்பதற்காக விவசாய நடுகை விதைகளை தேர்நதெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது என்றார்.

## அறிவித்தலை மீறி வாகனங்கள் நிறுத்தம்

யாழ்கஸ்தூரியார் வீதியில் வாகனங்கள் நிறுத்தத் தடை என பதாகை போடப்பட்டும் அவ்விடத்தில் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதால் இவ்வீதியூடான போக்குவரத்து நெருக்கடியின் மத்தியில் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வறிவித்தல்கள் பொலிஸாரினால் போடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவது மனிதாபிமானமற்ற செயற்பாடென சுட்டிக காட்டப்படுகிறது.

எனவே இவ்விடத்தில் வாகனங்களை நிறுத்துவோர் சிந்தித்து அறிவுறுத்தல்களைப் பின்பற்றினால் போக்குவரத்தை இலகுபடுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சாரம் விநியோகம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் செம்பியன்பற்று தொடக்கம் ஆழியவளை வரையான கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பிகளை இணைத்தல் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மருதங்கேணி சந்தியை அண்டிய பகுதி, தாளையடி கிராமங்களுக்கு மின்கம்பி இணைத்தல் வேலைகள் யாவும் முடிவடைந்த நிலையில் வெகு விரைவில் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மோசமான நிலையில் கேசாவில் வீதி

(குருநகர்)

யாழ்வண்.வடமேற்கு, கேசாவில் வீதி போக்குவரவுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்படுத்தும் அளவுக்கு மோசமாகப் பழுதடைந்துள்ளது.

சிவப்பிரகாசம் வீதியில் இருந்து மேற்கே கிளைவிடும் கேசாவில் வீதியின் தொடக்கப் பகுதியிலேயே பாரிய பல குழிகள் தோனறியுள்ளன.

மழை காலங்களில் மட்டுமன்றி அப்பகுதி வீட்டுக் கிணறுகள் இறைக்கப்பட்டாலும் அக்குழிகளில் வெள்ளம் வடிந்து போக்குவரவுக்கு இடையூறாக இருக்கின்றது.

பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அப்பகுதி மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (62)

# முரசின் இன்றைய பலன்

(11.04.2012 -புதன்கிழமை)

கரவருடம், பங்குனி மாதம் 29 ஆம் திகதி, பஞ்சமி பி.ப. 2.09 வரை, நட்சத்திரம் கேட்டை, சித்தம் மாலை 5.50 வரை, இராகுகாலம் 12.06 - 1.36 வரை, சுபநேரம் 4.36 - 6.06 வரை, எமகண்டம் 7.36 - 9.06 வரை, குளிகை காலம் 10.35 - 12. 05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முன்தினம் போல் இடமாற்றம் வரும், நினைத்த காரியம் நிறைவேறும், முன்னெச்சரிக்கை |
| ரிஷபம் | எதிர்ப்புக்கள், பிரயாணம் மகிழ்ச்சி, பெரிய மனிதர் நட்பு, கடன்கள் நிர்வர்த்தியாகும். |
| மிதுனம் | சுகவிருத்தி, குடும்பப் பிரச்சினைகள் அகலும், தீயவர்களைத் தவிர்க்கவும், உடல் ஆரோக்கியம். |
| கடகம் | கடன்கவலை, எதிர்பாராத வீண் விரயம், உடலில் சோர்வுநிலை, கிடைப்பதுடன் திருப்திப்படவும். |
| சிம்மம் | பணவரவுகள், தடைகள் நீங்கும், பயண அனுகூலங்கள், மேலதிகாரிகள் பாராட்டு. |
| கன்னி | சோர்வுநிலை, குடும்பத்தில் கருத்துவேறுபாடு, பணவரவில் நெருக்கடி, எதிர்பாராத இடமாற்றம் |
| துலாம் | பொருள் நட்டம், பிணை போக வேண்டாம், தடைகள் அகலும், வேலைப்பளு அதிகரிக்கும். |
| விருச்சிகம் | மனத்திருப்தி, பயணங்களால் அலைச்சல், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், மருத்துவச் செலவு |
| தனுசு | சகோதர உதவி, பணப்பரிமாற்றத்தில் கவனம், கௌரவமான பதவிகள், புத்திரரால் மகிழ்ச்சி. |
| மகரம் | உடல் உபாதை, அயலவரை அனுசரிக்கவும், குடும்பத்தில் ஒற்றுமை, திடீர் தனவரவு. |
| கும்பம் | ஓய்வு தேவை, மருத்துவச் செலவுகள், மனக் குழப்பம், சீரான கொடுக்கல் வாங்கல். |
| மீனம் | நன்மதிப்பு, முதலீடுகள் பெருகும், பிணை தவிர்க்கவும், பணியில் கவனம் செலுத்தவும். |

# மயானத்தில் அருகிலிருந்த கழிவுகள் அகற்றப்பட்டன



(புத்தூர்)

நீர்வேலி-கைதடி இணைப்பு வீதியில் உள்ள சியாக்காட்டுச் மயானத்திற்கு அருகில் கொட்டப்பட்ட கழிவுப் பொருட்கள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் அகற்றப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பல்வேறு தரப்பினரால் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டு வந்தன. இதனால் குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசத் தொடங்கியதை அடுத்து பிரதேச சபையினால் இந்தக் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பிரதேச சபைத் தலைவர் தெரிவிக்கையில், நீர்வேலி சியாக்காட்டு மயானத்தின் அருகில் பெருமளவு கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளதால் குறித்த பகுதியிலிருந்து தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டது. அத்துடன் இந்த வீதி கைதடிப் பகுதி இணைப்பு வீதியாக இருக்கின்றபடியால் இந்த வீதியால் செல்லும் மக்கள் துர்நாற்றம் காரணமாகப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினர் 650 லோட் ரக்டர் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டு நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டுள்ளது என்றார். அத்துடன் குறித்த பகுதியால் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் கழிவுப் பொருட்களைப் போடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (02)

# ஜெனிவாவில் இந்தியாவின் செயற்பாடு அமெரிக்காவே பிரதான காரணம்

## அமைச்சர் பசில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமைக்கு அமெரிக்காவே பிரதான காரணமாகும் எனவும் அதாவது இலங்கைக்கு எதிராக வாக்களிப்பது என்ற அசௌகரியமான தீர்மானத்தை இந்தியாவை எடுக்கவைத்தது அமெரிக்காவே எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ப்சில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவின் தீர்மானம் காரணமாக நாங்கள் கோபப்படவில்லை. அத்துடன் இந்தியாவின் நிலைமையை புரிந்துகொண்ட நாங்கள் வேதனையடைந்தோம். இந்தியாவும் வேதனை அடைந்திருக்கும் என்று எண்ணுகின்றோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது வரலாற்று ரீதியான நட்புறவைக் கொண்ட இலங்கைக்கு எதிராக வாக்களிக்க நேர்ந்தமை குறித்து இந்தியா வேதனை அடைந்திருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால் இந்தியாவினால் எதனையும் செய்ய முடியாத நிலைமையே காணப்பட்டது.

இந்தியா இவ்வாறான முடிவை எடுத்தமைக்கு தமிழ்நாட்டின் அழுத்தம்தான் பிரதான காரணம் என்று கூற முடியாது. மாறாக அமெரிக்காவே இந்தியாவை இவ்வாறானதொரு இக்கட்டான நிலைமைக்கு தள்ளி விட்டது. இந்தியா இவ்வாறான அசௌகரியமான தீர்மானத்தை எடுப்பதற்கான அழுத்தத்தை அமெரிக்காவே பிரயோகித்தது.

அதாவது, இந்தியாவுக்கு இந்த அநீதியை அமெரிக்கா செய்தது வெளிப்படையாகும். இதுதான் உண்மை நிலையாகும். ஒருவேளை இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் இன்று அந்நாட்டின் அரசாங்கம் பதவியில் இருந்திருக்காத நிலையே ஏற்பட்டிருக்கும்.

அதேவேளை இந்திய எதிர்க்கட்சி தலைவி தலைமையில் அந்நாட்டின் சர்வ கட்சி எம்.பி. க்கள் குழுவினர் இலங்கை வரவுள்ளனர். இவ்வாறான கால கட்டத்தில் இந்திய சர்வகட்சி எம்.பி. க்கள் குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அவர்களினால் இந்த விஜயத்தின் ஊடாக இலங்கையில் உண்மையில் என்ன நடக்கின்றது என்ற யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியும். இந்திய சர்வ கட்சி எம் பி.க்கள் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். அதன்மூலம் அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களையும் அவர்களினால் மேற்கொள்ள முடியும்.

இந்தியாவுடனும் சீனாவுடனும் நாங்கள் நெருக்கமான உறவையே பேணி வருகின்றோம். அதனை மேற்கு நாடுகளினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனினும் நாங்கள் அணிரோ கொள்கையுடன் தொடர்ந்து முன் செல்வோம் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## தகவல் தந்தால் பத்து இலட்சம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்து தகவல் தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சரியான தகவல்களைத் தருபவருக்கு இந்தச் சன்மானம் வழங்கப்படும் எனவும், தகவல் தருவோரின் விபரங்கள் இரகசியமாக பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இந்தத் தகவல்களை 0722117620 / 0112320141 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு வழங்க முடியும் என பொலிஸ் தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது.

# வட, கிழக்கில் மீன்பிடி அபிவிருத்தி; 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மீன்பிடியை அபிவிருத்தி செய்யவென 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு நீர்த்தேக்கத்தை மீளநிர்மாணிப்பதன் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மீன்பிடி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக, நாடளாவிய மீன்பிடியை அதிகரிக்கச் செய்யமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீரியல்கலாசார அபிவிருத்தி அதிகாரசபை 30 ஏக்கர் நிலப்பரப்பில் மீன் வளர்ப்பு மையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு 6 நடமாடும் குளிர் பதப்படுத்தல் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வுள்ளது.

மொத்தத் தேசிய உற்பத்தியில் மீன் உற்பத்தி 13% வீதம் என்வும், இதனை இவ் வருட இறுதியில் 23% வீதமாக உயர்த்துவதுடன், 2013 இல் இதன் அளவை இருமடங்காக்குவதே இதன் நோக்கமாகும்.

மீன்பிடி அமைச்சு அடுத்த வருட இறுதியில் 38,000 மெட்ரிக்தொன் மீன்பிடி உற்பத்தியை எற்றுமதி செய்வதை பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளது.

# டின் மீன்களில் அரைப்பங்கு உள்நாட்டில் உற்பத்தியாகும்

(கொழும்பு



இவ்வருட இறுதிக்குள் இலங்கைக்குத் தேவையான டின்மீன்களில் அரைப் பங்கையாவது உள்நாட்டில் தயாரிக்கப்பட முடியும் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன நம்பிககை வெளியிட்டுள்ளார்.

காலியில் அமைக்கப்பட்டுள்ள டின்மீன் தொழிற்சாலையில் ஏப்ரல் 3 ஆம் திகதி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. தற்பேரீது தினசரி 10,000 டின்களாக உள்ள இதன் உற்பத்தி படிப்படியாக 20,000 ஆக அதிகரிக்கப்படும் என அவர் கூறினார்.

பேலியகொடையிலும் புத்தளம் மாவட்டத்தின் முந்தலமவிலும் உள்ள மேலும் இரு தொழிற்சாலைகளிலும் இவ்வருடம் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மூன்று தொழிற் சாலைகள் மூலமும் தினமும் குறைந்த பட்சம் 60,000 டின்மீன்களை தயாரிக்க முடியும் என எதிர் பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

இலங்கைக்கு தினமும் 100,000-120,000 டின்மீன்கள் தேவைப்படுகின்றன.

தற்போது சீனா, தாய்லாந்து, சிலி ஆகிய நாடுகளிலிருந்து இவை இறக்குமதி செய்யப்படுகின்றன. இதற்காக வருடாந்தம் 520 கோடி ரூபா செலவிடப்படுகிறது என்றார்.

## வேதனம் இல்லை ஆசிரியர் கவலை



(கொழும்பு)

வருடாந்தம் ஏப்ரல் மாத விடுமுறை ஆரம்பமாகும் போது, வேதனம் வழங்கப்படுவது வழமையான போதிலும், இந்த வருடம் அது கிடைக்கவில்லை என ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

நாடளாவிய ரீதியாக சில கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்த வேதனம் வழங்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் பெரும்பாலான வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இந்த வேதனம் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் சிரமத்தை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறுபான்மை மக்களுடனான தொடர்பை நெருக்கமாகப் பேண வேண்டும்



(கொழும்பு)

தெற்கின் பிரதான கட்சிகள் சிறுபாண்மை மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களுடன் தொடர்புகளைப் பேணும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மே தினக் கூடங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுப்பான்மை சமூகத்துடன் இணைந்து செயற்படக் கூடிய கட்சிகள் இலங்கையில் காணப்படுகின்றன என சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

சகல இன சமூகங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என கருதும் அரசியல் கட்சிகள் இலங்கையில் இயங்கி வருகின்றன என்பதனை உலக சமூகம் புரிந்துகொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டிய தருணம் உருவாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# புத்தாண்டில் பூட்டு

(கொழும்பு)

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள மதுபான சாலைகளை இரண்டு நாட்களுக்கு மூடுவதற்கு மதுவரி திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், ஏப்ரல் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படுகின்றன.

இநதத் தினங்களில் மதுபானம் விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொருள் தட்டுப்பாடு புத்தாண்டில் இடமில்லை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாத வகையில் நாடளாவிய ரீதியில் சீரான விநியோகம் முன்னெடுக்கப்படுமென உள்ளூர் வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதைக் காரணம் காட்டியும் காய்கறிகள்- பழங்கள் உள்ளிட்ட எந்தவொரு அத்தியாவசிய உணவுப் பொருளினதும் விலை அதிகரிப்புக்கு இடமளிக்க முடியாதெனக் கூறிய அமைச்சர், நுகர் வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

பண்டிகைக் காலத்திற்கென பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவ்சிய உணவுப் பொருட்களும் கடந்த பெப்ரவரி மாதம் முதலே நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள சதொச கோப்சிட்டி மற்றும் கூட்டுறவு கடைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஏனைய தனியார் கடைகளுடன் ஒப்பிடுகையில் இங்கு சற்று குறைவான விலையில் தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அமைச்சர் கூறினார்.

## சீன பிரஜை திடீர் மரணம்

(கொழும்பு)

கற்பிட்டி - நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ப்ணிபுரிந்து வந்த சீன நாட்டு பிரஜை ஒருவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணிபுரிந்து வந்த 35 வயதுடைய சன்ஹெய்லுய் என்ற சீன நாட்டு பிரஜையே நேற்று முன்தினம் காலை உயிரிழந்தவராவார்.

இவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக குளியாப்பிட்டி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான மரணம் குறித்து கற்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து -

# கூட்டமைப்பின் மீது காதல் எதுவும் தமிழ் மக்களுக்குக் கிடையாது!

**சுதந்திரமடைந்த** ஆரம்ப காலத்தில் சிறிய ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த போதும் பின்னர் நீண்ட காலமாக இருக்கவில்லை. அந்த ஆதரவு கூட கட்சியின் ஆதரவாக இல்லாமல் இராமநாதன் குடும்பத்தினரின் தனிப்பட்ட ஆதரவாகவே இருந்தது. இராமநாதனின் மருமகன் நடேசபிள்ளை 1952 தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவினையே காங்கேசன்துறைத் தொகுதியில் தோற்கடித்திருந்தார்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் பிரவேசம் மகேஸ்வரன் என்கின்ற வர்த்தகர் மூலமே இடம் பெற்றது. இங்கும் கட்சிச் செல்வாக்கினை விட மகேஸ்வரனின் தனிப்பட்ட செல்வாக்கே வெற்றியடைவதற்கு காரணமாக இருந்தது. காரைநகர் மக்களின் ஊர்ப் பற்றும், ஐக்கியப்பட்ட உழைப்பும் மகேஸ்வரனுக்கு பக்கபலமாக இருந்தது. அவர் தனது வியாபார நுணுக்கங்களை அரசியலில் பயன்படுத்தினார். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு தமிழ்த் தேசியம் பேச அவரால் முடிந்தது. ஒரு எல்லைக்கு மேல் அவரது வியாபார அரசியல் அவரது உயிரையே பறித்தது என்பது வேறுகதை.

புலிகள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இருப்பது தமிழ்த்தேசிய அரசியலை பாதிக்கும் எனக் கருதியதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேருங்கள் அல்லது யாழ்ப்பாணத்தை விட்டு விலகுங்கள் என வற்புறுத்தினர். வேறு வழியில்லாமல் மகேஸ்வரன் கொழும்பில் போட்டியிட்டு மனோ கணேசனைப் பலவீனப்படுத்தினார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மகேஸ்வரனின் துணைவியார் விஜயகலா மகேஸ்வரனை யாழ்ப்பாணத்தில் வேட்பாளராக நிறுத்தியது. மகேஸ்வரனின் துணைவி என்பதைத் தவிர அவருக்கு வேறு எந்தவித அரசியல் தகைமையும் இருக்கவில்லை. மகேஸ்வரனின் தனிப்பட்ட செல்வாக்கு, பணபலம், காரைநகர் மக்களின் ஐக்கியப்பட்ட ஒத்துழைப்பு, போர்த் தோல்வியால் மக்களின் தேர்தல் புறக்கணிப்பு என்பன விளிம்பு நிலையில் விஜயகலா மகேஸ்வரனை வெற்றி பெறவைத்தது.



அவர்கொழும்பில் வர்த்தகத்தை நடாத்திக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தனக்கு தேவையானபோது அரசாங்கத்துடன் கொஞ்சிக் குலாவுவதற்கும் அவர் ஒருபோதும் தயங்கியதில்லை.

> மகேஸ்வரனின் வியாபார அரசியலை "பார்த்து இரசிக்கவாவது" முடிந்தது. ஆனால் விஜயகலாவின் கோமாளி அரசியலை சகித்துக் கொள்ளவும் முடியவில்லை. தற்போது சுவாமி நாதனையும் களமிறக்கும் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருப்பது போலத்தெரிகின்றது. கோமாளி அரசியலை இனி விஜயகலாவும், சுவாமிநாதனும் சேர்ந்து நடாத்தக் கூடும்.



அரசாங்கத்துடன் சேரப் போகின்றார் என்றும் அவர் அடிக்கடி கிசுகிசுக்கப்பட்டார். மகேஸ்வரனின் வியாபார அரசியலை "பார்த்து இரசிக்கவாவது" முடிந்தது. ஆனால் விஜயகலாவின் கோமாளி அரசியலை சகித்துக் கொள்ளவும் முடியவில்லை. தற்போது விஜயகலா மகேஸ்வரனோடு சேர்த்து இராமநாதன் பரம்பரையைச் சேர்ந்த சுவாமிநாதனையும் கள்மிறக்கும் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருப்பது போலத் தெரிகின்றது.

ஏற்கனவே தேசியப் பட்டியல் உறுப்பினரான சுவாமிநாதனால் தமிழ் அரசியலில் சிறிய தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. தமிழ் மக்களின் வாழ்வாதார முயற்சிகளுக்கும் எந்தப் பங்களிப்பையும் செய்யவில்லை. அருணாசலத்திற்கு பேரன் முறையானவர், கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறங் காவலர் என்ற தகைமைகள் மட்டுமே அவருக்கு உள்ளன. விஜயகலா மட்டும் நடாத்திய கோமாளி அரசியலை இனி விஜயகலாவும், சுவாமிநாதனும் சேர்ந்து நடாத்தக் கூடும்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாத வகையில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் மேதினத்தை நடாத்த முடிவு செய்தமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதில் முதலாவது ரணில் தலைமைக்கு எதிராக சஜித் பிரேமதாசா அணியினர் போராட்டங்களை நடாத்தி வருவதால் தென்னிலங்கையில் மேதினம் நடாத்தக் கூடிய நிலை இல்லாமல் இருப்பதாகும். கண்டியில் விலைவாசி உயர்வுக்கு எதிராக ரணில் நடாத்திய போராட்டத்தின் போதும் சஜித் பிரேமதாச குழுவினர் குழப்பங்களை ஏற்படுத்தினர். ரணில் பாதுகாப்பாக வாகனத்தில் ஏறியே தப்பித்துக் கொண்டார்.

சிங்கள சாதாரண மக்களின் ஆதரவு ரணிலுக்கு இல்லை. சஜித் பிரேமதாசாவிற்கே உள்ளது. பேரினவாத அரசியலிலும் அவர் அக்கறைசெலுத்துவதால் பேரினவாதிகளின் ஆதரவும் அவருக்கு உண்டு. ரணிலுக்கு இருக்கின்ற ஆதரவெல்லாம் சிங்கள உயர் குழாமின் ஆதரவும், தமிழ், முஸ்லீம் மக்களின் ஆதரவும் தான். ரணில் மேதினத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்த முற்படும்போது சஜித் பிரேமதாசாஆயிரக்கணக்கில் மக்களைத் திரட்டி கொழும்பில் போட்டி மேதினத்தை நடாத்தப் போவதாகவும் தகவல்.

இரண்டாவது காரணம் மேற்குலகின் அழுத்தமாகும். மேற்குலகின் இலங்கை நோக்கிய விரிவாக்கத்திற்கு அனைத்து மக்களினதும் ஆதரவு பெற்ற ஒரு தேசியக் கட்சி அவசியம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ்ப் பிரதேசங்களில் செல்வாக்கு பெறுவது கடினம். ஐக்கிய தேசியக் கட்சி மறைமுகமான இனவாதத்தையே பின்பற்றுவதால் இச் செயற்பாடு இலகுவானது என மேற்குலகம் கருதியிருக்கலாம். தமிழ் உயர் குழாமிற்கு ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக சிறிய காதல் அடிக்கடி வருவதால் இந்த முயற்சிகள் சிறியளவில் வெற்றிகளையும் தரக் கூடும்.

இதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்து செயற்பட வைக்க வேண்டும் என்ற இலக்கும் மேற்குலகத்திற்கு உண்டு. இந்த இலக்கு ஜனாதிபதி தேர்தலில் பயன் படக் கூடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து ஒரு தமிழ்க் கட்சியாக இருப்பது தமிழ்த் தேசிய அரசியலை வலுப்படுத்தவே பார்க்கும். தமிழ்த்தேசிய அரசியல் வளர்வதை தற்போது மேற்குலகமும் விரும்பவில்லை. தான் விரும்பும் ஆட்சி மாற்றத்திற்கு அது எப்போதும் இடைஞ்சலாக இருக்கும் என்பதே அதன் நினைப்பு. பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் வடக்கு மக்களை தேசிய கட்சிகள் மூலம் அரசியலுக்குள் கொண்டு வர வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.



எனவே சிங்கள தேசியக் கட்சியொன்றில் தொங்கிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்க வேண்டும் எனஅது விரும்புகின்றது. மலேசிய இந்தியர் காங்கிரஸ் அங்குள்ள தேசியக் கட்சியில் தொங்கிக் கொண்டிருப்பதுபோல கூட்டமைப்பும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. சம்பந்தன் தலைமைக்கும் இது விடயத்தில் எந்தவித ஆட்சேபனையும் கிடையாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக ஐக்கிய தேசியக்கட்சி 13ஆவது திருத்தத்தினையே முன்வைக்கின்றது. சம்பந்தன் தலைமையும் அதனையே முன் வைக்கின்றது. ஒரு தமிழ்த் தேசிய இயக்கமாக செயற்பட வேண்டும் என்ற இலக்கும் அதனிடம் கிடையாது. எதிர்க்கட்சி வரிசையிலுள்ள ஒரு தமிழ்க் கட்சியாக இருப்பதுடன் அது தனது செயற்பாட்டை சுருக்கி விட விரும்புகின்றது. ஒருபிரக்ஞை பூர்வ அரசியலுக்கு பதிலாக ஒரு ஜொலி அரசியலை நடாத்தவே அது முனைகின்றது.



சில பத்திரிகை எழுத்தாளர்கள் கூட்டமைப்பின் கோளாறினை ஒரு நடைமுறை சார்ந்த பிரச்சினையாக பார்க்க முற்படுகின்றனர். கூட்டமைப்பு பிரக்ஞை பூர்வமாக செயற்பட வேண்டும். போராட்டங்களை நடாத்த வேண்டும் என வேண்டுகோள்களை யெல்லாம் விடுக்கின்றனர். தெளிவான இலக்கு, உறுதியான கொள்கைகள் என்பன இருக்கும் போதுதான் பிரக்ஞைபூர்வமான அமைப்பொன்றை உருவாக்க முடியும். காலத்தின் தேவைக்கேற்ப நீண்ட கால, குறுகிய கால வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள முடியும். ஜொலி அரசியல் செய்வதற்காக வந்தவர்களிடம் இவற்றை எப்படி எதிர்பார்க்க முடியும். கூட்டமைப்பு போராட்டங்களை நடாத்த வேண்டும் என வேண்டுகோள் விடுப்பவர்கள் அதற்கான தேவை ஏதாவது கூட்டமைப்புக்கு இருக்கின்றதா? என்பதை முதலில் கூற வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடாத்த முற்படும். மேதினத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்குபற்றுவதனால் இரு கட்சிகளுக்குமே பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தென்னிலங்கையில் தற்போதும் ஒரு தீவிர தமிழ்த் தேசியக் கட்சியாகவே பார்க்கும் நிலை உள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் அணிக்குத் திரும்புவார்



(புதுடில்லி)

புற்று நோய் சிகிச்சை முடிந்து நாடு திரும்பியுள்ள யுவராஜ் சிங் விரைவில் அணிக்குத் திரும்புவார் என்று இந்திய கிரிக்கெட் சபைத் துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது, யுவராஜ் மிக விரைவாக குணமடைந்து நாடு திரும்பியுள்ளார். அவர் விரைவில் கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபடுவார் என்ற நம்பிக்கையுள்ளது. முழுமையாக உடல்தகுதி பெற்றவுடன் அணியில் இணைவார்.

நம் எதிர்ப்பார்ப்பையும் மீறிய அளவில் அவரது செயற்பாடுகள் இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யுவராஜ் சிங் கூறுகையில், நான் நன்றாக இருக்கிறேன் இன்று நடைபெற உள்ள ஊடக சந்திப்பில் மற்ற விடயங்களுக்கு பதிலளிக் கின்றேன் என்று கூறியுள்ளார்.

## நிரந்தரமான அணித் தலைவர் இலங்கை அணிக்கு வேண்டும்

(கொழும்பு)

இலங்கை அணிக்கான புதிய நிரந்தர அணித்தலைவர் ஒருவரை விரைவாகத் தேட வேண்டியுள்ளதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். தான் ஓர் இடைக்கால அணித்தலைவராகவே பதவியேற்றார் என்பதை மீள வலியுறுத்தியுள்ள மஹேல ஜெயவர்தன, புதிய அணித்தலைவ ரொருவரைக் கண்டறியும் வரையே தான் பதவி வகிப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

12 மாதகாலத்திற்கு அணியை வழி நடத்திச் செல்லும் கடமை எனக்குத் தரப் பட்டுள்ளது. அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை பார்க்க வேண்டியுள்ளது. இயலுமான வரை விரைவில் இளம் வீரர் ஒருவரைத் தலைவராக வளர்த்து அவரிடம் எவ்வளவு விரைவாக அணித் தலைமையைக் கையளிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அணித்தலைமைப் பொறுப்பைக் கையளிக்க விரும்புகின்றேன்.

அணியில் வீரர்களுக்கு தொடர்ச்சியான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

அணித்தலைமையில் தொடர்ந்தும்செயற்பட விரும்பவில்லை என்ற போதிலும், தனது சர்வதேசக் கிரிக்கெட் எதிர்காலம் தொடர்பாக எந்தவொரு முடிவையும் எடுக்க விரும்பவில்லை.

உலகக்கிண்ணத்தின்பின்னர் தேர்வாளர்களிடம் கலந்துரையாடியதாகவும், ஆறு மாதங்கள் கொண்ட காலப்பகுதியாகப் பிரித்து தனது கிரிக்கெட் வாழ்வை இனி நோக்கவுள்ளதாகவும், அணிக்காகத்தொடர்ந்து பிரகாசிக்கும் ஆவல் காணப்படும் வரை தொடர்ந்து விளையாட எதிர்பார்ப்பதாகவும், அதற்கு உடற்தகுதியையும்பேணி வருவதற்கான விசேட பயிற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்தது மகிழ்ச்சி

(மும்பை)

கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என மும்பை இன்டியன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்தார்.

கடைசி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டது. என்னுடன் பிராங்ளின் இருந்தார். கடைசி வரை களத்தில் நின்றால் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அமைதியுடன் களத்தில் இருந்தேன்.

4ஆவது பந்தில் சிக்சர் அடித்தது முதலில் திருப்பமாக இருந்தது. 5ஆவது பந்தில் எங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தது. கடைசிப் பந்தில் சிக்சர் அடித்து வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. தோல்வியில் இருந்து மீண்டு இந்த வெற்றியைப் பெற்று உள்ளோம்.

தொடர்ந்து இதே ஆட்டத் திறனை வெளிப்படுத்த முயற்சிப்போன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனத் தெரிவித்தார்.

## முன்னரே வென்றிருக்கலாம்



(மும்பை)

கடைசிப் பந்து வரை காத்திருக்காது முன்னரே வெற்றியைப் பெற்றிருக்க வேண்டும் என மும்பை இன்டியன்ஸ் அணித் தலைவர் ஹர்பஜன்சிங் தெரிவித்தார். 139 ரன் என்பது எடுக்கக்கூடிய இலக்குத்தான். வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் இந்த வெற்றியை முன்னதாகவே பெற்று இருக்க வேண்டும். கடைசிப் பந்துவரை காத்திருக்க வேண்டியதாயிற்று எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தோல்வி குறித்து டெக்கான் கப்டன் சங்கக்கரா கூறுகையில், 15 முதல் 20 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம். ரோகித்சர்மாவின் ஆட்டம் மிகவும் பிரமாதமாக இருந்தது. ஸ்டெயின், அமித் மிஸ்ரா நன்றாக பந்து வீசினார்கள். கிறிஸ்டியனுக்கு கடைசி ஓவர் மோசமாக அமைந்துவிட்டது எனத் தெரிவித்தார்.

## 40ஆவது பட்டம் வென்ற செரீனா



(கலிபோர்னியா)

டபிள்யு.டி.டி. வெற்றிக் கிண்ணத்தை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் கைப்பற்றிக் கொண்டார்.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சார்ல்ஸ்டனில் டபிள்யுடிஏ ரென்னிஸ் போட்டி நடந்தது. நேற்று முன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், செக் குடியரசின் லூசி சபரோவாவை எதிர்த்து விளையாடினார். இதில், செரினா 6,0, 6,1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று கோப்பையை கைப்பற்றினார். செரினா வெல்லும் 40ஆவது டபிள்யுடிஏ சம்பியன் பட்டம் இதுவாகும்.

## சாதிக்கும் நம்பிக்கை பிறந்துள்ளது

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் வலுவான போட்டி கொடுக்கக் கூடிய நம்பிகை ஏற்பட்டுள்ளதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் டரன் சமி தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்படி கருத்து வெளியிட்டார். ஒரு நாள் மற்றும் ருவென்ரி 20 தொடர்களை சமநிலைப்படுத்தியிருக்கின்றோம். இதேபோன்று டெஸ்ட் தொடரில் நம்ப முடியாத பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மேற்கிந்தியத்தீவுகள் ஆதிக்கம்




அவுஸ்ரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் மேற்கிந்தியத் தீவு-கள் அணி ஆதிக்கம் செலுத்திவருகிறது. மூன்றாம் நாள் ஆட்டமுடிவில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறி வருகிறது.

இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் விக்கெட் இழப்பின்றி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி 3ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதன்போது மேலதிகமாக 6 ஓட்டங்களை அணி பெற்ற போதிலும் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் எட் கொவான் - மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் டரன்சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். எட் கொவான் 14 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொடுத்தார்.

அவுஸ்ரேலிய அணியின் இரண்டாவது விக்கெட் 65 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டது. 42 ஓட்டங்களோடு சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டேவிட் வோணர் - டரன் சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் 3ஆவது விக்கெட்டாக ரிக்கி பொன்டிங் ஆட்டமிழந்தார்.அவர் ரண் அவுட் முறையில் ஆட்டமிழக்க அவுஸ்ரேலிய அணி 84 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

நான்காவது விக்கெட்டாக ஷேன் வொற்சன் ஆட்டமிழக்க.அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுக்களை 133 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாறியது. ஷேன் வொற்சன் 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

எனினும் அதன் பின்னர் இணைந்த அணித்தலைவர் மைக்கல் கிளார்க் மற்றும் மைக்கல் ஹசி இருவரும் ஐந்தாவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். அவுஸ்ரேலிய அணி 215 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்க அவுஸ்ரேலிய அணி மேலும் அழுத்தத்திற்குள்ளாகியது. எனினும் பின்னர் ஜோடி சேர்ந்த மத்தியூ வேட் மற்றும் மைக்கல் ஹசி இருவரும் மேலதிக விக்கெட்டுக்களை இழக்க விடாமல் தொடர்ந்து ஆடினர். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

மைக்கல் ஹசி 47 ஓட்டங்களுடனும், மத்தியூ வேட் 19 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டரன் சமி 2 விக்கெட்டுக்களையும், கெமர் றோச் மற்றும் தேவேந் திர பிஸூ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் 0கைப்பற்றினர். முன்னதாக முதல் இனிங்ஸில் துடுப் பெடுத்தாடிய மேற் கிந் தியத் தீவுகள் அணி 9 வீக்கெட்டுக் களை இழந்து 449 ஓட்டங் களைப் பெற் றது. இதன் படி அவுஸ் ரேலிய 201ஓட் டங்களால் பின் னிலையில் உள் ளது.

## உலகக் கிண்ணத்தை வென்றபின் ஓய்வுபெறவுள்ளாராம் கலிஸ்

(கொல்கத்தா)

2015ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகள் இணைந்து நடத்தவுள்ள உலகக் கிண்ணத்தை தென்னாபிரிக்க அணிக்காக வென்று கொடுக்க ஆசைப்படுவதாக தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் ஜக்ஸ் கலிஸ் தெரிவித்துள்ளார். அவ் உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த பின்னர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் எனது முக்கியமான நோக்கமாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் பெறவைப்பதே இலக்கு.

ஏனினும் சர்வதேசப் போட்டிகளைப் பொறுத்த வரை உலகக் கிண்ணம் வரை தென்னாபிரிக்காவிற்காக போட்டி களில் பங்குபற்ற விரும்புகின்றேன்.

2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்கு நான் முழுமையான உடற்தகுதியுடன் இருப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

எனது கிரிக்கெட் வாழ்வில் அனைத்து வெற்றிகளையும் பெற்றுக்கொண்டுள்ள போதிலும் உலகக்கிண்ணமொன்றை அணிக்காகப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. அதைத் தென்னாபிரிக்காவிற்காகப் பெற்றுக்கொடுத்து விட்டு ஓய்வுபெற விரும்புகின்றேன்.

தற்போதைய நிலையில் ஓய்வுபெறுவதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இன்னமும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் என்னால் சர்வதேசப் போட்டிகளில் விளையாட முடியும் என எதிர்பார்க்கின்றேன். இதுவரை காலமும் கிரிக்கெட் மைதானத்திற்குள் நுழையும் போது முழுமையான உடற்தகுதியுள்ள ஒருவராகவே நுழைந்தேன். மீதிக் காலத்திலும் அவ்வாறே செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.





வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண கல்வித் திணைக்களங்கள், மாகாண ம[illegible]ட மரதன் ஓட்டப் போட்டியில் வீரர்கள் போட்டிக்குத் தயாராவதையும், வெற்றிபெற்ற 10 வீரர்களையும் படத்தில் காணலாம். (12)

# மாகாண மட்ட மரதன் வெற்றியீட்டிய மாணவர்கள் விபரம்

வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண கல்வித் திணைக களத்தினால் மாகாணப் பாட சாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டி முடிவுகள் வடமாகாண கல்வித் திணைக்கள மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபால னால் வெளியிடப்பட் டுள்ளது.

இப்போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாண வர்களின் (ஆண்கள், பெண் கள்) விபரம் வருமாறு:

**ஆண்கள்**

ரி. அன்ரனி புல்மன் (கிளி. மத்திய கல்லூரி), பி. நிமோச் (கிளிநொச்சி மகா வித்தி), பி. பிரசாந் (கற்சிலைமடு ஜி.ரி. எம்.எஸ்) ஆர். சாந்தன் (வவு. சுதந்திரபுரம் ஜி.ரி.எம்.எஸ்), ஏ. அனோஜன் (கிளி. செல்லை யாத்தீவு ஜி.ரி.எம்.எஸ்.), எஸ். தனுஜன் (வவு. தரணிக்குளம் கணேச வித்தியாலயம்), பி. பத்மரூபன் (வவு. சேமமடு சண்முகானந்தா வித்தி), பி. மதீபன் (வவு. சுந்திரபுரம் சரஸ்வதி வித்தி), ரி. வாசலன் (வவு. சின்னடம்பன் பாரதி வித்தி), வி. பிரவீந்தன் (வவு. புத்துக்குளம் மகா வித்தி)

**பெண்கள்**

ஆர். சாளினி (வவு. புதுக் குளம் மகா வித்தி), ஜெ. மரிய கொறட்டி (யாழ். எழுவைதீவு முருகவேள் வித்தி), கே. மேகலா (வவு. புதுக்குளம் மகா வித்தி), எம். ஜெயந்தினி (கிளி. இராமநாதபுரம் கிழக்கு ஜி.ரி.எம். எஸ்.), கே. ரஜித்தா (வவு. புளி யங்குளம் இந்துக் கல்லூரி), வி. திரை கிளி. அக்கராயன் மகா வித்தி), ரி. தர்சிகா வவு. சின்னடம் பன் பாரதி வித்தி), எஸ். லோஜினி (மு. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஆர். தாஜினி (வவு புதுக்குளம் மகா வித்தி), கே. சுலக்சனா (கிளி. முக்கொம்பன் ஜி.ரி.எம்.எஸ்) (12)

# புத்தாண்டு தினப் போட்டிகள் பங்குபற்றுவோர் பதிவு செய்யவும்

(சாவகச்சேரி)

தமிழ், சிங்களப் புத்தா ண்டை முன்னிட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினர் பாரம் பரிய விளையாட்டு நிகழ்வை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை கொடிகாமம் அ.த.க.பாடசாலை மைதானத் தில் நடத்தவுள்ளனர்.

இதில் காலை 6 மணிக்கு மரதன் ஓட்டம், ஆண்கள், பெண் களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி கொடிகாமம் நகரப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும். தொடர்ந்து கரப்பந்தாட்டம், தலை யணைச் சண்டை, முட்டி உடை த்தல், சங்கீதக் கதிரை, யானை க்கு கண் வைத்தல், சைக்கிள் மெதுவாக ஓடுதல், முட்டை எறிந்து ஏந்துதல், பூசணிக்காய் க்குள் வித்துக்களை எண்ணு தல், கயிறு இழுத்தல், ஒளிந் திருக்கும் நபரைக் கண்டுபிடித் தல் போன்ற போட்டி நிகழ்வு கள் நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் தமது கிராம சேவையாளரின் உறுதிப்படுத் தல் கடிதத்துடன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முன் பதிவுகளைச் செய்யுமாறும் இதில் வெற்றி பெறும் வீரர் களுக்கு பெறுமதியான பரிசில் கள் வழங் கப்படவுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி வை.எம். ஜெகத்பண்டார தெரிவித் துள்ளார். (11)

# யா[illegible]ப்பாணக் கல்லூரி சம்பியன்

([illegible]ழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம் பெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.


மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம் பெற்ற இறுதிப் போட்டி யில் வட்டுக்கோட்டை யாழப் பாணக் கல்லூரியும் சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணி களும் சம நிலையில் காணப்பட் டாலும் யாழ்ப்பாணக் கல்லூரி சற்று துடிப்புடன் விளையாடி வெற்றியை தனதாக்கிக் கொண் டது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கடைசி கால் பாதி ஆட்டத்தில் காட்டிய வேகத்தை போட்டி ஆரம்பமாகிய மூன்று கால் பாதி ஆட்டங்களிலும் காட் டாத நிலமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பின்னடை வுக்கு காரணமாக அமைந்தது.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று கால் பாதி ஆட்டங்களையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முறையே 01இற்கு 00 03இற்கு 00 07இற்குச் 02 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற போதிலும்

இறுதி கால் பாதி ஆட் டத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிரடியான ஆட்டத் தின் மூலம் 08இற்கு 07 புள்ளி கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட இறுதியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி 18இற்கு 10 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று வலய சம்பிய னாக தெரிவு செய்யப்பட்டது.



# துறையூர் ஐயனார் முன்பள்ளி விளையாட்டு

(வேலணை)

துறையூர் ஐயனார் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு ஐயனார் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி. சிவராசா, வேலணை பிரதேச சபை உப தலைவர் சி. கார்த்திகேசு ஆகியோர் கலந்து கொண்டனர். (85)

# துடுப்பாட்ட சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(வவுனியா)

வவுனியா மாவட்ட கடினப் பந்து துடுப்பாட்டச் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய் யப்பட்டுள்ளதாக அதன் செய லாளர் ரி. கமலன் தெரிவித்தார்.

தலைவராக அசங்கவும், செயலாளராக ரி. கமலனும், பொரு ளாளராக வை. மிதுளனும் உப தலைவராக என். சஞ்சீவனும், உப செயலாளராக ரதீபனும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (125)

# 60 கோல் வீரர்

ஐரோப்பிய கால்பந்து சம்பி யன்ஷிப் வரலாற்றில் 40 ஆண்டு களுக்குப் பிறகு ஒரு சீசனில் 60 கோல் அடித்த முதல் வீரர் என்ற பெருமையை பார்சி லோனா அணி நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி (ஆர்ஜென் டினா) பெற்றுள்ளார். ஸர கோஸா அணியுடன் நடந்த போட்டியில் அவர் 2 கோல் அடித்து அசத்தினார். இப் போட்டியில் பார்சிலோனா 4,1 என்ற கோல் கணக்கில் வென் றது. முன்னதாக, 1972,73 சீசனில் பேயர்ன் முனிச் வீரர் ஜெர்ட் முல்லர் 67 கோல் அடித் ததே அதிகபட்சமாகும்.



முழங்காவில் மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியில் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வை காணலாம். (112)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பாடசாலைகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என அனைத்து இடங்களிலும் புத்தாண்டு விளை யாட்டுப் போட்டிகளும் கொண்டாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், தென்பகுதி பாலர் பாடசாலை மாணவர்கள் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# வாழ்க்கையின் கேள்விகளும் தயார்நிலைப் பதில்களும்!

முல்லா நஸ்ருதீன் வசிக்கும் நகரத்திற்கு சக்கரவர்த்தி வருகிறார் என்று முன்கூட்டியே தகவல் வந்தது. நகர மக்களுக்கு சக்கரவர்த்தியிடம் பேசுவதில் பயம் கலந்த தயக்கம். அவர்களோ படிப்பறிவில்லாதவர்கள். அவர்கள் எல்லோரும் முல்லாவிடம் வந்து "சக்கரவர்த்தி நம் நகரத்திற்கு முதல் முறையாக வருகிறார். எங்களுக்கு ஒரு சக்கரவர்த்தியிடம் எப்படிப் பேச வேண்டும் என்கிற அறிவெல்லாம் கிடையாது. அதனால் எங்கள் சார்பாக நீங்களே சக்கரவர்த்தியிடம் பேச வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள முல்லாவும் ஒத்துக் கொண்டார். "கவலைப்படாதீர்கள். நான் பல அரசர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் பேசியும் இருக்கிறேன். அரசவைக்கும் நான் போயிருக்கிறேன். அதனால் இது எனக்குப் பெரிய விஷயமில்லை" என்றார்.

ஆனால் சக்கரவர்த்தியின் ஆட்களுக்கோ படிப்பறிவில்லாத அந்த நகர மக்கள் ஏடாகூடமாக ஏதாவது சக்கரவர்த்தியிடம் பேசி விடுவார்களோ என்று பயம். எனவே சக்கரவர்த்தி வருவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே அந்த நகரத் திற்கு வந்து மக்கள் சார்பாக யார் பேசப் போகிறார் என்று கேட்டார்கள். மக்கள முல்லாவை சுட்டிக் காட்டினார்கள்.

எனவே, முல்லாவைத் தயார் செய்வதற்காக அவரிடம் வந்தார்கள். முல்லாவிடம் "நீங்கள் கவலைப்படாதீர்கள். சக்கரவர்த்தி கஷ்டமான கேள்விகள் எதுவும் கேட்க மாட்டார். எளிமையான கேள்விகள் தான் கேட்பார். நீங்கள் அதற்கு பதில் அளித்தால் போதும். முதலில் உங்கள் வயது எத்தனை என்று கேட்பார். உங்களுக்கு வயது எத்தனை?"

முல்லா சொன்னார். "எழுபது"

"அப்படியானால் முதல் கேள்விக்கு "எழுபது" என்று சொல்லுங்கள் போதும். நீங்கள் அதற்கு அதிகமாக எதுவும் சொல்லக் கூடாது. அடுத்த கேள்வி "நீங்கள் இறை சேவகராக எத்தனை வருடங்களாக இருக்கிறீர்கள் என்று கேட்பார். நீங்கள் எத்தனை வருடங்களாக இறை சேவகராக இருக்கிறீர்கள்?"

"நாற்பது வருடங்கள்"

"சரி. நீங்கள் இரண்டாவது கேள்விக்கு நாற்பது வருடங்கள் என்று சொல்லுங்கள் போதும். தாறுமாறாக ஏதேதோ சொல்லி சக்கரவர்த்தியின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம்" என்று சொல்லி வேறு சில கேள்விகளையும், அதற்கான பதில்களையும் சொல்லித் தந்தார்கள்.



இப்படி எல்லாம் சொல்லி முல்லா நஸ்ருதீனைத் தயார் செய்த ஆட்கள் சக்கரவர்த்தியிடமும் சென்று "அந்த நகர மக்கள் படிப்பறிவில்லாதவர்கள். அவர்கள் பேசத் தேர்ந்தெடுத்த ஆளும் முட்டாள் போலவே தெரிகிறான். எனவே நீங்கள் கஷ்டமான கேள்விகள் கேட்டு அந்த ஆளை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்காதீர்கள். நீங்கள் இந்த எளிமையான கேள்விகளையே கேளுங்கள்." என்று சொல்லி முல்லாவிற்குச் சொல்லித் தந்த கேள்விகளை எழுதி சக்கரவர்த்தியிடமும் தந்தார்கள். சக்கரவர்த்தியும் படித்துப் பார்த்து ஒத்துக் கொண்டார்.

சக்கரவர்த்தி நகரத்திற்கு வந்த போது முல்லா மரியாதையுடன் முன்னால் வந்து நின்றார். சக்கரவர்த்திக்கு கேள்விகள் நினைவிருந்தாலும் கேள்விகளின் வரிசை மறந்து போய் விட்டது. அவர் முல்லாவிடம் "நீங்கள் எவ்வளவு வருடங்களாக இறை சேவகராக இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

சக்கரவர்த்தியின் ஆட்கள் அருகிலேயே இருப்பதைப் பார்த்தபடியே "எழுபது" என்றார் முல்லா.

சக்கரவர்த்திக்கோ ஆச்சரியம். இந்த ஆளுக்கு வயதே எழுபது இருக்கும் போல இருக்கிறது. ஆனால எழுபது வருடங்களாக இறை சேவகராக இருக்கிறேன் என்கிறாரே என்று நினைத்தவராக "அப்படியானால் உங்களுக்கு வயது எவ்வளவு?" என்று கேட்டார்.

முல்லா சொன்னார். "நாற்பது வருடங்கள்"

சக்கரவர்த்தி கேட்டார். "உங்களுக்கென்ன பைத்தியமா?"

முல்லா சொன்னார். "ஐயா நாம் இருவருமே பைத்தியங்கள் தான். நீங்கள் தவறான கேள்விகளைக் கேட்கிறீர்கள். நானோ சரியான பதில்களைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். உங்கள் ஆட்கள் நான் சரியாகச் சொல்கிறேனா என்று என்னைப் பார்த்தபடியே இருக்கிறார்கள். நான் என்ன செய்வேன்?"

படிக்கையில் இது நகைச்சுவையாகத் தோன்றினாலும் நம் வாழ்விலும் இது போன்ற முட்டாள்தனங்களை நாமும் நிறைய செய்கிறோம்.

வாழ்க்கை என்ற பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு நாம் முன்கூட்டியே பதில்களைத் தயார் செய்து கொண்டு காத்திருக்கையில் பல சமயங்களில் கேள்வித்தாளே மாறிப் போகிறது. கேள்விகள் மாறி விட்டனவே என்று கோபப்படுகிறோம். எத்தனை கஷ்டப்பட்டு கேள்விகளுக்கு பதில்களைத் தயார் செய்து வைத்திருந்தோம் என்று எண்ணி குமுறுகிறோம். தயார் செய்து வைத்திருந்த கேள்விகள் கேட்கப்படாமல் வேறு கேள்விகள் கேட்கப்பட்டு விட்டனவே என்று அங்கலாய்க்கிறோம்.

சிலபஸில் (syllabus) இல்லாத கேள்வி கேட்கப்படும் போது மாணவன் திடுக்கிடுவது போலத்தான் நாம் இருக்கிறோம். சில பிரச்சினைகள் வரும் போது இது போன்ற பிரச்சினைகள் எனக்கு வந்திருக்கக் கூடாதே என்று மலைத்துப் போய் விடுகிறோம்.

வாழ்க்கையில் முன்பே தயார் செய்து வைத்திருக்கும் தீர்வுகள் என்றும் புதிதாக வரும் பிரச்சினைகளுக்குப் பொருத்தமாக இருப்பதில்லை. சூழ்நிலைகளும், பிரச்சினைகளின் தன்மைகளும் அடிக்கடி மாறிக் கொண்டே இருப்பதால் நாம் வாழ்வில் எதிர்கொள்கிற கேள்விகளும் மாறிய வண்ணம் தான் இருக்கின்றன.

அடுத்தவர்களுக்கு பயன்பட்ட தீர்வுகளும், நம் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளாக இருக்கும் என்று சொல்லி விட முடியாது. அதுவும் தயார் செய்து வைத்திருக்கும் பதில்களைப் போலத்தான்.

எனவே வாழ்க்கை என்ற பரீட்சையில் பெரும் வெற்றி பெற நிகழ்காலத்தில் முழுவதுமாக இருங்கள். என்ன கேள்வி கேட்கப்படுகிறது என்று தெரியாமலேயே பதிலைத் தயார் செய்து எழுதத் துடிக்காதீர்கள். அடுத்தவர் பதிலை "கொப்பி" அடிக்காதீர்கள். அவர்கள் எழுதுகின்ற பரீட்சையே வேறாகக் கூட இருக்கலாம்.

கேள்வியைப் புரிந்து கொண்டு, உங்களிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டு, சிந்தித்து தகுந்த பதில் எழுத ஆயத்தமாக இருங்கள். அப்போது மட்டுமே உங்களால் வாழ்க்கையில் உண்மையான வெற்றி பெற முடியும்.

- என். கணேசன்.

# கூடாரம் செய்பவன்!



பாரசீக நாட்டுப் பெருங்கவி உமர் கய்யாம். இவரது முழுப் பெயர் கியாது டீன் அபுல்பாத் உமர். தம் பெயரோடு, "கய்யாம்" என்பதைச் சேர்த்துக் கொண்டார். "கய்யாம்" என்பதற்கு, "கூடாரம் செய்பவன்" என்று பொருள்.

இவரோடு பாடசாலையில் படித்த நண்பன், இளமையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தான் ஒரு மாகாணத்தை ஆளும் உன்னத பதவிக்கு வந்ததும், உமர் கவலையின்றி வாழ, ஆண்டுதோறும் பெரும் தொகையை உமருக்குக் கொடுத்து வந்தான்.

உமர், கவியாக மட்டும் வாழவில்லை, கணிதத்திலும், சோதிடத்திலும் சிறந்த மேதையாக விளங்கினார். அது பற்றி பல நூல்களை எழுதினார். ஆனால், அவைகளால் அவர் உலகப்புகழ் பெறவில்லை. கவிஞராகவே அவர் நிலைத்திருக்கிறார்.

கணித, சோதிட ஆராய்ச்சிகளுக்கு நடுவே, நேரம் கிடைக்கும் போது இம்மை, மறுமை பற்றி ஆழ்ந்து சிந்தித்து, பல கவிதைகளை எழுதினார். இந்தக் கவிதைகளுக்கு, "ரூபாயத்" என்று பெயர். ரூபாயத் என்றால், "நான்கடிச் செய்யுள்" என்று பொருள்.

கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை மொழிபெயர்த்த பிரபலமான இவர் பாடல்:

"வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு...
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு...
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு...
வையாந்தருமில் வனமின்றி
வாழும் சொர்க்கம்
வேறுண்டோ?"

# சொந்த நாட்டுக்கு விஜயம்!


மக்டொனால்ட், பிரிட்டனின் முதல் தொழிற் கட்சிப் பிரதமர். இவர் அடிக்கடி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதில் ஆர்வமுள்ளவர். எதிர்க் கட்சிகள் எவ்வளவோ கண்டனம் செய்தும், இவர் காதில் ஏறவில்லை.



ஒரு முறை கனடா நாட்டுக்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு இவர் இங்கிலாந்து திரும்பிய நேரத்தில், "ரைம்ஸ்" பத்திரிகை, "மக்டொனால்ட் இங்கிலாந்துக்கு விஜயம்!" என்று தலைப்புச் செய்தி வெளியிட்டது.

இந்தத் தலைப்பு, பிரதம மந்திரியைத் துணுக்குறச் செய்தது. அதிலிருந்து அவருடைய வெளிநாட்டுப் பயணங்கள் குறைந்தன!

# இஸ்ரேலை விமர்சிக்கும் எழுத்தாளர்



ஜேர்மனியை சேர்ந்த நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் குந்தர் கிராஸ், தனது கவிதை மூலம் தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ளார். அவர் இஸ்ரேல் அரசை கடுமையாகச் சாடி எழுதியுள்ள கவிதை விமர்சனத்தைக் கிளப்பியிருக்கிறது.

தாம் இஸ்ரேல் அரசை தனிமைப்படுத்த விரும்புவதாகவும் இஸ்ரேல் என்ற நாட்டை அல்ல என்றும் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் அரசு மேற்கொண்டிருக்கும் அணு ஆயுத திட்டம் குறித்து மேற்கு நாடுகள் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றன. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேலை எவ்வளவு சிதைக்க வேண்டுமோ அவ்வளவு சிதைத்துவிட்டார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, இஸ்ரேல் அரசு குந்தர் கிராஸை விமர்சித்துள்ளது. அதே நேரத்தில், கிராஸின் கருத்துகளை ஈரான் வரவேற்றுள்ளது.

84 வயதாகும் குந்தர் கிராஸ், "தி டின் டிரம்" எனும் நாவலுக்காக 1999ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்.

# சினிமா சினிமா

▶ தனது கனவுப் படமான முகமூடியை, தனது ஸ்டைலில் நடிகர் ஜீவாவை வைத்து எடுத்து வருகிறார் இயக்குநர் மிஸ்கின். டிம் பேர்டன்ஸ் படங்களால் மிகவும் கவரப்பட்ட மிஸ்கின், தற்போது எடுத்து வரும் முகமூடி படத்தில் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் காட்சிகளும் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.



இக்கதையே ஒரு சூப்பர் ஹீரோ தான். எனவே, இக்கதைக்கு யார் சரியாக வருவார்கள் என்று யோசித்ததில் ஜீவா முதல் தெரிவாக இருந்தார். ஜீவா இதுவரை நடித்திராத கதாபாத்திரத்தில் நடிக்கிறார். நிச்சயம் அவருக்கும் இப்படம் நல்ல பெயரை பெற்றுத் தரும். முகமூடி, மிகச் சிறந்த பொழுதுபோக்கு சாகசப் படமாக இருக்கும். ஆனால் நம்ப முடியாத காட்சிகள் எதையும் கொண்டிருக்காது என்கிறார் மிஸ்கின்.

▶ நடிகர் விமல் - ஓவியா (மெரினா பட நாயகி) ஜோடியாக நடிக்கும் காதல் மற்றும் நகைச்சுவை கலந்த படத்திற்கு "சில்லுனு ஒரு சந்திப்பு" என்று பெயரிடப்பட்டுள்ளது.



இப்படத்தில் ஒரு பிளாஷ்பேக் காட்சிக்காக விமல் 12ஆம் வகுப்பு மாணவராக நடித்துள்ளார்.

மிஸ்கினின் உதவி இயக்குநராக இருந்த ரவி லெனின் இப்படத்தை இயக்குகிறார்.

▶ காதல் படத்தின் இயக்குநர் பாலாஜி சக்திவேல் இயக்கியுள்ள "வழக்கு எண் 18/9" படம் இம்மாதம் 27ஆம் திகதி வெளியாகிறது. படத்தைத் தயாரித்திருப்பவர் லிங்குசாமி.



இரண்டு ஜோடிகளுக்கு ஏற்படும் காதலை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ள இப்படம், சமூகத்திற்கு ஒரு நல்ல செய்தியையும் கூறும் வகையில் படமாக்கப்பட்டுள்ளதாக இயக்குநர் கூறுகிறார்.

▶ நடிகருக்கு இணையான வேடங்களை மட்டுமே ஏற்று நடிப்பதாக நடிகை கார்த்திகா கூறியுள்ளார். கோ படத்துக்குப் பிறகு திறமையை வெளிப்படுத்தும் வேடங்களில் மட்டுமே நடிக்க முடிவு செய்துள்ளேன். சட்டம் ஒரு இருட்டறை படத்தின் ரீமேக்கில் விக்ரம் பிரபுவுடன் ஜோடி சேர்ந்துள்ளேன். நடிப்புக்கு முக்கியத்துவம் இல்லாத படங்களில் நடிக்க மறுத்து வருவதாகவும் கார்த்திகா கூறியுள்ளார். தற்போது இவர் பாரதிராஜாவின் அன்னக்கொடியும் கொடிவீரனும் படத்தில் நடித்து வருகிறார்.



# தாய்லாந்து

நம் நாட்டுக்கு அந்நியப்படாத தட்பவெப்பம், நாகரிகம், கடற்கரை, உணவுப்பழக்கம் (ஓரளவு), கடைத்தெருக்கள், பேரங்காடிக் கலாசாரம் என இருக்கும் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக். ஆனால் உண்மையான பெயர், உலகத்திலேயே மிக நீண்ட வேறொரு பெயராக கின்னஸில் இடம் பெற்றுள்ளது. வழிகாட்டிகள் அந்தப் பெயரை ஒரு பாட்டைப் போலவே பாடி "கம்ப்ரசித்" என்ற வார்த்தையுடன் முடிப்பர். ஏறக்குறைய 170 எழுத்துக்கள்.

"பாங்க் மோ" என்றால் தீவு. பாங் மகோக் என்பது ஒருவித பழம். இவ்வகைப் பழங்கள் நிறைய உள்ள தீவு என்பதன் குறிப்பாக பாங்மகோக் என்றிருந்த பெயரை வழக்கம்போல ஆங்கிலேயர்கள் தங்கள் உச்சரிப்புக்கு வசதியாக பாங்கொக் ஆக்கிவிட்டனர்.



நகரெங்கும் பறக்கும் ரயில்கள். குளிரூட்டப் பட்ட பெட்டிகள். உள்ளே கணினி அறிவிப்புத் திரைகள். ஒவ்வொரு நிறுத்தம் வரும்போதும் அதன் பெயரையும் வண்டி கிளம்பியவுடன் அடுத்த நிறுத்தத்தின் பெயரையும் தாய் மற்றும் ஆங்கி லத்தில் அறிவிப்பார்கள். சிங்கப்பூரைப் போலவே படு கச்சிதமான ஏற்பாடுகளுடன் முன்னேறி யிருக்கும் நகரம்.

சுபாவத்திலேயே தாய் மக்கள் மென்மையான வர்கள். அவர்கள் மொழி மிக மிருதுவானது. வார்த்தைகளை நீட்டி முழக்கி உச்சரிப்பார்கள். மழலைத்தனம் ஒலிக்கும் "கபுங்க்காஆஆஆ" என்று நீட்டிச் சொல்வதற்கு நன்றி என்று அர்த்தம்.

தாய்லாந்து பட்டு உலகப் பிரசித்தி பெற்றது. அந்த நாட்டின் ராணி ஒருமுறை கிராமங்களுக் குச் சென்றபோது கிராமத்தினர் உடுத்திவந்த பாரம்பரியப் பட்டின் மேல் மனதைப் பறிகொ டுத்து அதன் அருமையையும் அது எத்தனை குடும்பங்களுக்கு வாழ்வாதாரமானது என்பதை யும் உணர்ந்து அவர்களிடமிருந்து வாடிக்கை யாக பட்டுத்துணிகள் வாங்க ஆரம்பித்தார். பிறகு அதற்கென ஓர் அமைப்பை ஏற்படுத்தி ஏழை மக்களிடமிருந்து பட்டுநூல்கள் வாங்கி நெய்வதற்கு உற்சாகப்படுத்தினார். பின்பு தரமான பட்டுக்களை உற்பத்தி செய்யவைத்து, சிறந்தவற் றிற்குப் பரிசளித்து பட்டு உற்பத்தியை பாது காத்து வளர்ச்சிக்கும் வழிவகுத்திருக்கிறார். ஆனால் விலையுயர்ந்த தாய்லாந்து பட்டுகள் அங்கேயும் மலிவான சீனா பட்டுடன் போட்டிபோட வேண்டித் தான் இருக்கிறது.

தாய்லாந்தில் புத்தர்தான் எங்கும் நிறைந்த கடவுள். பிரம்மாவையும் நான்கு தலை புத்தா என்றே விளிக்கிறார்கள். வீதிக்கு வீதி புத்தர் சிலையும் தேவியர் சிலைகளும் இருக்கும். அதற்கு பூக்கள், கண்ணாடி டம்ளர்களிலும் போத்தல்களிலும் பானங்கள் (ஸ்ட்ரோவுடன்), தேநீர் நிவேதனமாக வைத்துவிட்டுப் போவார்கள். வெற்றிலையைச் சுருட்டி வைத்தும் படைக்கிறார் கள். குனிந்த தலை, கூப்பிய கைகள், அமைதியான முகம் - இதுதான் அவர்களுடைய பிரார்த்தனை முறை.

நீள அகலமாய் நகரின் கடைவீதிகள். சந்து கள் என்றும் பொருள்படும் அவற்றை ஸோய் என்பார்கள். வாரஇறுதி நாட்களில் செயற்படும் சாட்டுசாக் என்கிற பரந்தவெளி வணிகவளாகத் தில் கிடைக்காத பொருட்களே இல்லை.

தங்கபுத்தர் ஆலயம் வாட்- ட்ரைமிட் என்ற இடத்தில் இருக்கிறது. உயர்ந்த கோபுரம் சித்திர வேலைப்பாடுகள் உள்ள வெளிச் சுவர்கள். ட்ராகன் வடிவில் கைப்படி. உள்ளே தங்க புத்தர் (ஆமாம் முற்றிலும் தங்கம்) சுமார் ஆறு தொன் தங்க எடையில் எளிமையின் உருவாக பத்தடி உயர புத்தர்.

தங்க புத்தர் பற்றி ஒரு கதையுண்டு. முன்னொரு காலத்தில் புத்தபிக்குகள் பர்மியர்களின் படை யெடுப்பிற்கு பயந்து புத்தர் சிலையை களிமண் ணால் மூடிவைத்திருந்தார்களாம். பின்வந்த புத்தபிக்குகள் பலர் அந்த களிமண் புத்தரை வேறிடம் மாற்ற முயன்றபோது மழை பெய்யவே, களிமண் சிலையின் பொருக்கு ஒன்று பெயர்ந்து விழுந்தது. கைவிளக்கின் ஒளியில் அந்த இடம் ஜொலித்தது. மேற்பூச்சை மெதுவாக சில்லுசில் லாக பெயர்த்தபோது முழு தங்க புத்தர் காணக் கிடைத்தாராம்.

50 அடி உயரம் 150 அடி நீளத்தில் சயன புத்தர் சிலை உள்ள கோயிலும் உண்டு. பாங் கொக் இரத்தினத் தொழிற்சாலையும் புகழ் பெற்றது. அதேபோல சாலைகளிலேயே வண்ண விளக்கு கள் இசையொலி கேளிக்கை நடனங்கள் மற்றும் ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக ஆரோக்கியமான மஸாஜ் இவற்றுக்கும் புகழ் பெற்றது தாய்லாந்து.

பாங்கொக்கிலிருந்து சுமார் 40 கி.மீ தொலை வில் உள்ளது பிபி தீவுகள். தாய்லாந்து செல்பவர் கள் தவறவிடக்கூடாத இடம். கடலில் பயணித்த சிறிது நேரத்தில் பரந்த கடல்நடுவே தென்படுவது அருகருகே ஓங்கி நிற்கும் இரு குன்றுத்தீவுகள்! விரிந்த அலைகடல் நடுவே மௌனகம்பீரமாக எழுந்து நிற்கும் ஆச்சரியம்.

# ஆங்கில வார்த்தைகள் பத்து இலட்சம்!

தமிழ் எத்தனை தூரம வளர்ந்திருக்கிறது என்பதை அளக்க ஒரு புதிய அளவு கோல் கிடைத்திருக்கிறது. 2012ஆம் ஆண்டு தொடக் கத்தில் விக்கிப்பீடியாவில் பல மொழிகளில் மொத்த மாக எத்தனை கட்டுரைகள் ஏறியிருக்கின்றன என்று தேடிப் பார்த்ததில்... ஆங்கி லத்தில் 3,900,000 கட்டுரை கள், ஜப்பான் மொழி 791,000 கட்டுரைகள், சீன மொழி 385,000, அரேபிய மொழி 156,000, ஹிந்தி 93,000 என்று விடை வந்தது. தமிழில் 43,000 கட்டுரைகள் மட்டுமே.



இதில் பரிதாபம் என்னவென்றால் ஒரு கோடிக்கும் குறைவான வர்கள் பேசும் ஹீப்ரு மொழியில் 129,000 கட்டுரைகள் ஏறிவிட்டன. ஏழு கோடி மக்கள் பேசும் தமிழில் ஆக 43,000 கட்டுரைகள்தான். உலகத்தில் ஆக மூன்று இலட்சம் பேர் மட்டும் பேசும் ஐஸ்லாண்டிக மொழியில்கூட 36,000 கட்டுரைகள் எழுதப்பட்டுவிட்டன.

தமிழின் தொன்மையை நினைக்கும்போது பிரமிப்பாக இருக்கும். அதே சமயம் ஒருவித சோகமும் வந்து கப்பிக் கொள்ளும். இதை தவிர்க்க முடியாமல் இருக்கிறது. யேசுநாதர் பிறந்த சமயம் உலகின் சனத்தொகை 200 மில்லியன்தான். அதாவது இன்றைய பிரேசில் நாட்டு சனத்தொகை அன்றைய முழு உலகத்தின் சனத்தொகையாக இருந்தது.

அப்படியானால் அன்று இந்தியாவின் சனத்தொகை என்னவாக இருந்திருக்கும்? 30 மில்லியன் என்று வைக்கலாம். தமிழ்நாட்டின் சனத்தொகை ஒரு மில்லியன் என்று எடுத்துக் கொண்டாலும் அப்பொழுதே சங்க இலக்கியம் படைக்கத் தொடங்கிவிட்டார்கள். தமிழர் நாகரிகம் எத்தனை உயர்ந்ததாக இருக்கவேண்டும்.


தமிழர்களிடம் நாவல், சிறுகதை வடிவம் இருந்ததில்லை. ஆங்கிலேயர்களிடம் இருந்து அவற்றை கடன் வாங்கியதுதான். ஆனால் தொகை இலக்கியத்தை (anthology) கண்டுபிடித்தது தமிழர்கள்தான். புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை என தொகை நூல்கள் தமிழிலேதான் முதலில் வந்தன. ஆயிரம் வருடங்கள் கழித்துத்தான் ஆங்கிலத்தில் Book of Exeter என்ற முதல் தொகை நூல் வந்தது. அதையிட்டு நாங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

நான் பிறந்தபோது உலகத்தின் சனத்தொகை 2.3 பில்லியன். இன்று அது 7.0 பில்லியன், மூன்று மடங்காக வளர்ந்திருக்கிறது. ஆனால் பூமியின் அளவு அதேதான். இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழின் வளர்ச்சி எப்படி இருக்கிறது. மூன்று மடங்கு வளர்ந்திருக்கிறது என்று சொல்லமுடியுமா?

2009ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆம் திகதியை எல்லோரும் கொண்டாடினார்கள். என்ன விசயம் என்று கேட்டபோது ஆங்கில வார்த்தைகளின் எண்ணிக்கை அன்று ஒரு மில்லியனை தொட்டுவிட்டது என்றார்கள். யாரோ கணக்குவைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழில் எத்தனை வார்த்தைகள் உள்ளன என்று யாராவது கணக்கு வைத்திருக்கிறார்களா?

- அ. முத்துலிங்கம்

# ஆன்மீகச் சின்னங்கள் கொள்ளை; தடுத்து நிறுத்துவது அவசியம்



– கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆன்மீகச் சின்னங்கள் கொள்ளையடிக்கப்படுவதும், கொச்சைப்படுத்தப்படுவதும் சமூகத்திற்கு நல்லதல்லவென செஞ்சொற் சொல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக குடாநாட்டு கோவில்களிலுள்ள வாகனங்களின் தலைகள், களவாடப்பட்டு வருகின்றமை தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பழமைவாய்ந்த ஆலயங்களின் சுவாமி உருவச்சிலைகள், தேர்ச்சிற்பங்கள் வாகனங்களின் தலைகள் மற்றும் ஆன்மீகப் பெறுமதிமிக்க பொருடகள் அண்மைக்காலமாக குடாநாட்டில் களவாடப்பட்டு வருகின்றன.

மனிதன் சிறப்பான முறையில் வாழ்வதற்கு உறுதுணையாக இருப்பது ஆன்மீகம். இந்த ஆன்மீகச்சின்னங்கள் கொள்ளையடிக்கப்படுவதும், கொச்சைப்படுத்தப்படுவதும் சமூகத்திற்கு நல்லதல்ல.

இவ்வாறான சம்பவங்களால் குடாநாட்டிலுள்ள இந்துக்கள் பெரும் கவலைக்கும், துயரத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

ஆன்மீகத்திற்கு விரோதமான இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதும், கோவில்களின் பெறுமதி மிக்க சிலைகள், சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியதும் அனைவரினதும் பொறுப்பாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# சத்திரசிகிச்சை கையுறை கொள்வனவில் மோசடி

(கொழும்பு)

சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தும் கையுறைக் கொள்வனவில் நிதி மோசடி இடம் பெற்றிருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை நிதியமைச்சு ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில், வைத்தியசாலைகள் மட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திர சிகிச்சை கையுறைகளின் விபரங்களை திரட்டும் நடவடிக்கைகளையும் நிதியமைச்சு முன்னெடுத்துள்ளது.

சத்திர சிகிச்சைக் கையுறைகளை அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குரிய டெண்டரைப் பொறுப்பெடுத்த நிறுவனம் இதனை உரியகால வேளையில் வழங்குவதற்குத் தவறியுள்ளதால் தேவைப்படும் சத்திரசிகிச்சைக் கையுறைகளை பிரதேச மட்டத்திலேயே கொள்வனவு செய்துகொள்ளுமாறு அரசாங்க வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் கையுறைக் கொள்வனவில் நிதி மோசடி இடம்பெற்றிருப்பதாக சுகாதார அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இத் தகவல்களை அடிப்படையாக வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு, நிதியமைச்சிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

# கோரிக்கை நிறைவேறாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கவுள்ளதாக பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஊதிய உயர்வு உள்ளிட்ட மூன்று பிரதான கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் எற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எதிர்வரும் வாரத்தில் எதிர்பார்ப்பதாக சபையின் பிரதான செயலாளர் சமன் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்தில் தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள 560 வைத்தியசாலைகளில் பணிபுரியும் பூரண வைத்திய சேவை ஒன்றிணைந்த அதிகார சபையினர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் என அவர் எச்சரித்துள்ளார்.

தமது பிரச்சினை குறித்து சுகாதார அமைச்சு, பொருளாதார அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகளிடம் கடந்த காலங்களில் அறிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.


பிரச்சினை தொடர்பில் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தும் தீர்வு கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கூடங்குளத்தில் அணுக்கசிவைக் கண்டறிய இலங்கையில் எச்சரிக்கைக் கோபுரங்கள்

(கொழும்பு)

தமிழ் நாட்டின் கூடங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அணு உலையினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்ப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக அணு சக்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜப்பான், புகுசிமாவில் ஏற்பட்டது போன்று அணுக்கசிவு ஏற்பட்டால் அதனை முன் கூட்டி அறிவதற்காக இந்தியாவை நோக்கி ஐந்து முன்னெச்சரிக்கை கோபுரங்களை அமைக்கவுள்ளதாக அணு சக்தி அதிகார சபைத் தலைவர் டொக்டர் ரஞ்சித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு சமீபமாக கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணு உலையில் அணுக் கசிவு ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்க எத்தகைய உதவிகளை இந்தியாவிடமிருந்து பெறுவது என்பது குறித்து மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்தியாவுடன் பேச்சுநடத்தி வருகிறார்.

இந்த அணு உலையினால் 200 கிலோ மீற்றர் தூரம் வரை பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறிய அவர்,

அதற்கு முகம் கொடுக்கக் கூடியவாறு முன்னேற்பாடுகளை மேற்கொள்ள தயாராகி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதன்படி, ஜூன் மாதத்தில் காங்கேசன்துறை உட்பட 5 இடங்களில் முன்னெச்சரிக்கைக் கோபுரங்களை நிர்மாணிக்கவுள்ளதாக கூறிய அவர் இதன் மூலம் கூடங்குளத்தில் அணுக் கசிவு ஏற்பட்டால் முன் கூட்டி அறிய முடியும் என்றார்.


# மூக்குக் கண்ணாடியை பெறலாம்

(வடமராட்சி)

இலங்கை போக்குவரத்துச் சபை பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பஸ்ஸில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழிலிருந்து பருத்தித்துறைக்குச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பயணி ஒருவரின் மூக்கு கண்ணாடி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது.

குறித்த பயணி, இந்தக் கண்ணாடியை பருத்தித்துறை மத்திய பேருந்து நிலையத்தில் கடமையில் இருக்கும் காவலாளியிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (116)

# ஆயுர்வேத மருந்து வகைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி



(கொழும்பு)

ஆயுர்வேத வைத்தியத்திற்குத் தேவையான மருந்து வகைகளை இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்வ தற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆயுர்வேத வைத்தியர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இக்கலந்துரையாடலின்போது ஆயுர்வேத மருத்துவர்கள் தாம் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகள் தொடர்பாக அமைச்சரிடம் விரிவாக எடுத்து விளக்கியதுடன் தமது கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் ஆயுர்வேத வைத்தியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடியதுடன் சுதேச மருத்துவத்துறை அமைச்சருடனும் தொலைபேசியில் கலந்துரையாடி நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதேவேளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் உள்ளிட்ட யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் சிலரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கலந்துரையாடலை மேற கொண்டனர். இதன்போது பல்வேறு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

கோரிக்கைகளை ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள் துறைசார்ந்தோர் ஊடாக தேவைகள் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட ஆயுர்வேத வைத்திய சங்கத்தலைவர் டொக்டர் நவரட்ணம் வடமாகாண சுகா தார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் திருமதி சியாமளா துரைரட்ணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வவுனியா வடக்கு வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

பிரிவு 1 - எழுத்து

இ.யசோதா (ஓமந்தை மத்திய கல்லூரி), த.கிருத்திகா (மாறா விலுப்பை அ.த.க. பாடசாலை), ஞா.மேரிஆன் (மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயம்).

பிரிவு 2 - கட்டுரை வரைதல

ப.பரணிசா (நெடுங்கேணி மகா வித்தியாலயம்), சு.யுகாந்திகா (பம்பைமடு அ.த.க. பாடசாலை), சி.கிருஷ்ஷாணி (நொச்சிமோட்டை க.உயர்தர வித்தியாலயம்).

பிரிவு 3 - கட்டுரை வரைதல

வெ.நிரஞ்சனி (கிடாச்சூரி அ.த.க. பாடசாலை), ச.விதுஷா (குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை), ச.சஞ்சிகா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்.

பிரிவு 4 - கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும்

உ.விபூசனா (கனகராயன்குயம ம.வித்தியாலயம்), ஜெ.டிலானி (கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம்), வெ.கலைவாணி (சுந்தரபுரம் அ.த.க பாடசாலை).

பிரிவு 5 - தமிழியற் கட்டுரை

சி.ரதிதேசி (நெடுங்கேணி ம.வித்தியாலயம்), ப.தரணிதரன் (சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்), சோ. நிரஞ்சன் (புதுக்குளம் ம.வித்தி).

பிரிவு 4- இலக்கணப்போட்டி

த.தனுசன் (கனகராயன்குளம் ம. வித்தி), ச.டிசாந்தன் (சுதந்திரபுரம் சரஸ்வதி வித்தி), தே.துவாரகா (கல்மடு ம. வித்தி).

யோ.சுகன்யா (புதுக்குளம் ம. வித்தி), வி.ரஞ்சிதமலர் (சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்), கா.விஜிகரன் (புளியங்குளம் ம.வி).

பிரிவு 5 - திறனாய்வு போட்டி

கே.அனோஜா (புதுக்குளம் ம. வித்தி), அ. நிவேதா (ஓமந்தை ம. கல்லூரி), க.கயல்விழி (கல்மடு ம. வித்தி).

பிரிவு 4 குறுநாடக ஆக்கம்

மோ.சரண்சா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி), து.சிந்துஜா (ஓமந்தை மத்திய கல்லூரி), த.சந்திராவதி சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்). (தொடரும்)...

அருகே உள்ள அட்டவணையில் மூவர் இரு தடவைகளிற் பெற்ற பொருளின் நிறை கிராமிற் காட்டப்பட்டுள்ளது. இதன்படி,

| | 1 ஆம் முறை | 2ஆம் முறை | இரு முறையும் பெற்ற தொகை (கிராமில்) |
|---|---|---|---|
| A | 250 g | 500 g | ...................... |
| B | 300 g | ...................... | 1000 g |
| C | ...................... | 750 g | 1350 g |


33) A இருமுறையும் பெற்ற தொகையைக் கட்டத்திற் குறிக்க..........................................

34) C 1ஆம் முறை பெற்ற தொகை எத்தனை கிராம்?..........................................

35) B 2ஆம் முறை பெற்ற தொகை எத்தனை கிராம்?..........................................


ஒவ்வொரு பட வரிசையிலும் வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதற்குரிய எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

36)




(..............................)

37)




(..............................)

38)




(..............................)

39)



(..............................)

40)



(..............................)





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

1 மணி


# கல்வி முரசு

வெளியீடு 52

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

பின்வரும் வரைபை அவதானித்து விடை எழுதுக.

வாரம் ஒன்றில் 5 நாட்கள் ஒரு பழ வியாபாரி விற்ற தோடம்பழங்களின் எண்ணிக்கையை இவ்வரைபு காட்டுகின்றது.




01) ஆகக் கூடுதலான பழங்கள் விற்பனையாகிய நாள் எது?

..........................................

02) மிகக் குறைவான பழங்கள் விற்பனையாகிய நாள் எது?

..........................................

03) வியாழக்கிழமை எத்தனை பழங்கள் விற்பனையாகின?

..........................................

04) ஒரு பழம் ரூபா 15 ஆயின், திங்கட்கிழமை பழ விற்பனையின் மூலம் அவன் பெறும் பணம் எவ்வளவு?

..........................................

05) அவன் எந்த நாளில் பழ விற்பனை மூலம் அதிக பணத்தைப் பெற்றிருப்பான்?

..........................................

06) எந்த இரு நாட்களில் சம எண்ணிக்கையான பழங்கள் விற்பனையாகின?

..........................................

07) இவ்வாரத்தில் அவன் எவ்வளவு பழம் மொத்தமாக விற்பனை செய்தான்?

..........................................

08) வார இறுதியில் விற்பனை மூலம் அவன் எவ்வளவு பணம் பெற்றிருப்பான்?


..........................................

கீழே தரப்படும் சொற்களைப் பொருத்தமான இடத்தில் எழுதுவதன் மூலம் பந்தியைப் பூரணப்படுத்துக.

| பனித்துளிகள், சூரியன், கடல்நீரில், மேகங்கள், கடற்கரை |
|---|

அது ஒரு காலை நேரம். அக்கினிப் பந்து ஒன்று கீழ் வானத்தைக் கிழித்துக் கொண்டு வருவதே போன்று 09).................................................................உதித்தான். பஞ்சுக் கூட்டங்கள் போல 10)................................................பொதி பொதியாய்ப் பரவியிருந்தன. புல் நுனிகளில் வெண் முத்துக்கள் போல இருந்த 11).............................................மெல்ல உருகின. வெள்ளைச் சீலையை விரித்தாற் போல இருந்த 12).................................................................மணலில் நான் அமர்ந்தேன். நீலப் பளிங்கு போன்றிருந்த 13).................................................................அலைகள் உயர்ந்து எழுந்து கரைக்கு வந்து தரையை முத்தமிட்டன.

பின்வரும் படங்களுடன் தொடர்புடைய விடையின் கீழ்க் கோடிடுக.

14) 

1) இனிய குரலுடைய இராக்காலப் பறவை
2) இனிமையற்ற குரலுடைய இராக்காலப் பறவை
3) விவசாயிக்கு உதவுகின்ற இராக்காலப் பறவை

15) 

1) நண்பர்கள் ஓடிப்பிடித்து விளையாடுகின்றனர்
2) ஓட்டப் போட்டியொன்றில் இருவர் ஓடுகின்றனர்
3) நண்பர்கள் இருவர் சண்டை பிடிக்கின்றனர்

தரப்பட்ட தரவுகளைக் கொண்டு கீழ்வரும் கணிதச் செய்கைக்கான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| $R=2,\ X=4,\ Y=6,\ Z=8$ |
|---|

16) $X+Y+Z$ =.................................................. 17) $Z-X-R$ =..................................................

18) $Z+Y-X$ =..................................................

கீழ்க் காணப்படும் இரு வரிசைகளும் சமமாயின் (ச) எனவும், சமனற்றதாயின் (பி) எனவும் அடைப்பிற்குள் அடையாளமிடுக.

19) ⌽ R O A C ⬭ - ⌽ R O A C ⬭ (............)


20) △ ○ □ △ △ □ - △ ○ □ □ △ □ (............)


21) அ ப E ம F ஆ - அ ம E ப F ஆ (............)

22) ⬡ △ △ ○ ⬡ △ - ⬡ △ △ ○ ⬡ △ (............)



பின்வரும் பின்னக் கணிதச் செய்கையை அவதானித்து விடையில் தரப்பட்டுள்ள உருவை நிழற்றுக.

23) 

24) 

இல.25 - 29 வரையிலான வினாக்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைத் தெரிந்து எழுதுக.

| மீனவர்கள், கிராமத்தவர், இலங்கையர், தாய்நாடு, கோடை |
|---|

25) <u>நாங்கள் பிறந்த நாட்டின்</u> மீது பற்று வைப்பது நமது கடமையாகும்.
..................................................................................................

26) இரவிலே <u>மீன் பிடிக்கச் செல்பவர்கள</u> காலையில் வீடு திரும்புவர்.
..................................................................................................

27) <u>கிராமங்களில் வசிப்போா</u> ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருப்பர்.
..................................................................................................

28) <u>இலங்கையில் வசிக்கும் மக்களில்</u> அதிகமானோர் பௌத்தர்களே.
..................................................................................................

29) நாடு முழுவதும் நிலவிய <u>மழையற்ற கால நிலையால</u> பயிர்ச் செய்கை தடைப்பட்டது.
..................................................................................................

ரகு, ராகவன், கமலன், சேகர், ராமன் ஆகிய ஐந்து மாணவர்களிடம் உள்ள விளையாட்டுப் பொருள்களை கீழுள்ள அட்டவணை குறித்துக் காட்டுகின்றது. அட்டவணையில் √ என்றால் உண்டு என்றும், X என்றால் இல்லை என்றும் பொருள் கொள்ளவும்.

| பெயர் | விமானம் | லொறி | கார் | மோட்டர் சைக்கிள் |
|---|---|---|---|---|
| ரகு | √ | X | √ | √ |
| ராகவன் | √ | X | X | √ |
| கமலன் | √ | √ | √ | √ |
| சேகர் | X | X | √ | √ |
| ராமன் | X | √ | √ | √ |

30) சகல வகையான விளையாட்டுப் பொருள்களையும் வைத்திருப்பவர் யார்?
..................................................................................................

31) எல்லோரிடமும் உள்ள ஒரே வகையான விளையாட்டுப் பொருள் யாது?
..................................................................................................

32) இவர்களிடம் குறைவாக உள்ள விளையாட்டுப் பொருள் எது?
..................................................................................................

# பெற்றோரின் ஒத்துழைப்பின்மையால் இயங்காதிருக்கும் சிறுவர் கழகம்

பெற்றோர்களின் ஒத்துழைப்பின்மையால், சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத்துடன் இணைந்து செயற்படும் சிறுவர் கழகம் கடந்த மூன்று வருடங்களாக செயற்படாதுள்ளதாக சிறுவர் மேம்பாட்டு அதிகாரி ந.சந்திரா தெரிவித்தார்.

சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத்தின் 34ஆவது ஆண்டு விழாவும், பொதுக்கூட்டமும் கடந்த வெள்ளிக்கிழமை சனசமூக நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பிள்ளைகள் தமது ஆளுமைகளை விருத்திசெய்து கொள்ளும் தளமாக சிறுவர் கழகங்களே காணப்படுவதாகக் கூறிய அவர், பெற்றோர்கள் இதனை உணர்ந்து இனிமேலாவது தமது பிள்ளைகளை சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி அவர்களது ஆளுமைகளை வளர்க்க வழிவகுக்கவேண்டும் என்றார்.

மேலும், இந்தப் பொதுக் கூட்டத்தில் கிராமத்தின் 400 கிலோ மீற்றர் நீளமான வீதிப்புனரமைப்பு தொடர்பாகவும், பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது.



அத்துடன், ஜே/196 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த தையல் வேலை தெரிந்த அனைவருக்கும் தவணைமுறைக் கட்டண அடிப்படையில் 15,000 ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள வழங்கப்பட்டன. சொந்தமாகக் காணியுள்ளவர்களுக்கு மலசல கூடவசதிகளும், மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் வழங்கப்படவுள்ள 10 இலட்சம் வீட்டுத் தோட்ட பயனாளிகளில் இந்தக் கிரமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 பேரில் முதல்கட்டமாக 5 பயனாளிகளுக்கு தானிய விதைகளும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

கிராமச் சங்கத்தின் தலைவி சுரேஸ்குமார் சிவாஜினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் நன்நடத்தை அதிகாரி சிவஞானவேல், சிறுவர் மேம்பாட்டு அதிகாரி சந்திரா, சிறுவர் நிகழ்ச்சிதிட்ட உத்தியோகத்தர் நவசீலன், சமுத்திஉத்தியோகத்தர் சிறிஸ்கந்தராஜா ஜே/196 கிராம உத்தியோகத்தர் யஜுஜன் என பலர் கலந்து கொண்டனர்

1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கலைவாணி சனசமூக நிலையமானது, விளையாட்டு கழகம் , மாலை நேரவகுப்புகள், இசை, நடன வகுப்புகள் என்பிரதேச மக்களின் வளர்ச்சிக்காக அளப்பரிய சேவையற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)


# கிளிநொச்சியில் பட்டப் பகலில் தொலைபேசிகள் திருட்டு

(பிரமிலன்)

கிளிநொச்சிப் பகுதியில் காற்றினால சேதமாக்கப்பட்ட தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றினை ஊழியர்கள் திருத்திக் கொண்டிருந்த வேளை, அந்தக் கடைக்குள் திடீரெனப் புகுந்த திருடர்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தொலைபேசிகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலை அண்மித்த பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் திடீரென வீசிய கடுங்காற்றினால், அந்தப் பகுதியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு சேதங்களுக்குள்ளாகியது.

தூக்கி வீசப்பட்ட தொலைபேசி விற்பனை நிலையத்தின் கூரைகளை மீள் திருத்தும் பணியில், விற்பனை நிலைய ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேளையே, திடீரென விற்பனை நிலையத்தினுள் புகுந்த திருடர்கள் சிலர், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தொலைபேசிகளைக் திருடிச் சென்றுள்ளனர். (சி)



# யாழ். சமுர்த்தி அதிகார சபையின் புத்தாண்டுச் சந்தையும், விற்பனையும்



(பகீ,கிரு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சமுர்த்தி அதிகார சபை மற்றும் நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப்பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த புத்தாண்டு சந்தைக் கண்காட்சியும், விற்பனையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.செந்தில்நந்தன் தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்தக் கண்காட்சியினை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆரம்பித்து வைத்தார்.

இங்கு புடைவைகள், மரக்கறிகள், பழவகைகள் இனிப்புப் பண்டங்கள், கைத்தொழில் பொருட்கள், விவசாய பொருட்கள், கைவினைப் பொருட்கள் என ஏராளமானவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு விதைகள், கன்றுகள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சமுர்த்தி அதிகார சபை, நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப்பிரிவு ஆகிய இணைந்து, மகிந்த சிந்தனையின் திவிநெகும திட்டத்தின்கீழ் இந்த கண்காட்சியினை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சி.சிவசிறி, நல்லூர் பிரதேசசெயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.ஆர் சிவரூபன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (சி)



# மெய்தான் பாருங்கோ...

## பெண் என்பவள்...?



ஐந்து பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாக இருக்கிற எந்தவொரு அரசனும் கடைசியில ஆண்டியாப் போய் விடுவான்... எண்டு சொல்லுறதைக் கேள்விப்பட்டிருப்பியள்.

செல்வச்செழிப்போடை இராஜ போக வாழ்க்கை வாழுற அரசனுக்கே இப்படியான ஒரு நிலைமை ஏற்படுமெண்டால், அவனுக்குக் கீழை வாழுகிற சாதாரண ஒரு குடிமகனின் நிலைமை எப்படியிருக்கும் எண்டதை கொஞ்சம் யோசிச்சும் பாக்கவேணும் கண்டியளே!

ஏனெண்டால், ஒரு குடும்பத் தலைவனுக்கு மூத்தது ஒரு பெண்ணாகப் பிறந்து, பிறகு பிறக்கிற பிள்ளையளும் அடுத்தடுத்து பெண்ணாகப் பிறந்துதுகளெண்டால், அவன்ர சீவியப்பாட்டுக்கான போராட்டம் ஒரு புறமிருக்க, அந்தப் பிள்ளையளின்ர வளர்ச்சிக்காகவும், வளர்ந்தாப்பிறகு கலியாணத்துக்கு சீதன பாதனம் குடுக்கிறதுக்காகவும் அவன் மேலதிகமாக நல்லா உழைக்க வேண்டியிருக்குது பாருங்கோ.

அப்பிடி உழைச்சுத் தேடிவைச்சாலும், பிள்ளையளுக்கு கலியாணம் எண்டது உடன நடந்து முடியிற காரியமில்லை. மூத்த பெண்பிள்ளைக்கு சம்மந்தம் பேச வெளிக்கிட்டால், அது ஏதோ ஒருவகையில பொருத்தப்பாடானதாக அமைஞ்சு முடிஞ்சிட வேணும். இல்லையெண்டால் எங்கட சமூகத்தின்ர நாக்குகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே! நாலு விதமாகக் கதைக்க வெளிக்கிடத் தொடங்கியிடும்.

சில குடும்பங்களில பாருங்கோ! இப்பிடிப் பொம்புளைப் பிள்ளையள் நாலு அல்லது ஐஞ்சு பேராவது ஆம்பிளைச் சகோதரங்கள் இல்லாமலும் இருக்கினம்.

இப்பிடியான ஒரு சூழ்நிலை ஒரு குடும்பத் தலைவனுக்கு இருக்கேக்கை, அவன் உடல் ரீதியாக உழைச்சாலும், நாளடைவில தன்ர பிள்ளையளின்ர வாழ்க்கையைக் குறிச்சு உள ரீதியாகத் தளர்ந்து போகிறான் எண்டதுதான் உண்மை.

பரம்பரைச் சொத்து வைச்சிருக்கிறவன் பாடு பரவாயில்லை. தன்னட்டை இருக்கிறதை அவன் எல்லாப் பிள்ளையளுக்கும் ஏதோ பங்கிட்டுக் குடுத்திட்டுப் போய்ச் சேர்ந்திடுவான்.

ஆனா, சாதாரண ஒரு தோட்டத் தொழிலாளியாகச் சீவிக்கிறவனுக்கு இப்பிடிச் செய்து முடிக்க சாத்தியப்படாது பாருங்கோ!

நான் ஏன் இண்டைக்கு இதைப் பற்றிச் சொல்ல வாறன் எண்டால், நானும் மூத்த பொம்புளைச் சகோதரங்கள் மூண்டு பேரோடை இருந்து நல்லாக் கஷ்டப்பட்டனான் கண்டியளே. அதால சில குடும்பங்களில வயசு வந்தும் கலியாணம் கட்டாமல் இருக்கிற பெண் பிள்ளையளைக் கண்டால் எனக்கு என்ர சகோதரியளின்ர முகங்கள்தான் நினைவுக்கு வரும்.

அதோட இன்னுமொரு கசப்பான விசயம் சொல்ல வாறன். நான் முன்னம் சொன்னமாதிரி, ஒருவனுக்கு நாலைஞ்சு பொம்புளைப்பிள்ளையள் இருந்தால், அந்தப் பிள்ளையள் வளர்ந்து பெரிய பிள்ளைகளாகி கலியாண வயசில இருக்கேக்கை, அவையளின்ர உறவு முறையான ஆட்களும், அதுவும் கஷ்டப்பட்ட குடும்பமெண்டால் அவையளைவிட்டு மெல்லக் கழண்டு நிற்பினம் பாருங்கோ!

சில இடங்களில மாமன் - மச்சான் எண்ட உறவு முறையைக் காரணம் காட்டி, ரண்டாம் மனிசர் மூலம் மாப்பிளை கேட்கப் போனால், சீதனம் எக்கச்சக்கமாகக் கேட்டு விலகிப்போகிடுவினம். அந்த நேரத்திலதான் அண்ணன் - தங்கை, அக்கா - தம்பி... எண்ட உறவு எப்படிப்பட்டதெண்டது பெண்ணைப் பெத்தவைக்கு நல்லா விளங்கும் கண்டியளே!

இப்ப உலகம் எவ்வளவோ மாற்றமடைஞ்சு வருகுது... எண்டு சொன்னாலும், ஆம்பிளையளின்ர மனசில இன்னும் வந்ததாக எனக்குத் தெரியேல்லை. அப்பிடியொரு மாற்றம் வந்திருந்தா இப்பவும் 35 - 40 வயசு வரைக்கும் ஒரு பெண் வாழா வெட்டியாக வீட்டுக்குள்ளயிருந்து பெருமூச்செறிஞ்சு கொண்டிருப்பாளே?

“சீதனமும் வேணும் ; சிங்கார நாச்சியாரும் வேணும்...” எண்டு ஒருக்கா ‘சிரித்திரன்’ ஆசிரியர் ‘சுந்தர் ஐயா’ எள்ளல் சித்திரமாக கீறிக்காட்டினது போல, போகப் பொருளாக அனுபவிக்கிறதுக்கு பெண்ணும் வேணும், விரும்பின மாதிரிச் செலவழிக்கிறதுக்கு அவளின்ர பொருள் பண்டமும் சீதனமா வேணுமெண்டு நினைக்கிற ஆம்பிளையள் நிறைஞ்சிருக்கிற இந்த உலகத்தில, நாலைஞ்சு குமர்ப்பிள்ளையளை கலியாண வயசில வைச்சுக் கொண்டிருக்கிற ஒரு குடும்பத் தலைவன் என்ன செய்ய முடியும்?

கலியாணம் செய்யிற வயசில பொம்புளை வீட்டை போய், பவுண் இவ்வளவு...? காசு இவ்வளவு...?காணி பூமி பரப்பு இவ்வளவு வேணும்... எண்டு சொல்லாமல், பெண் வீட்டார் தங்களால இயன்றதை தங்கட பிள்ளைக்காகக் குடுக்கிறதை மனப்பூர்வமாக விரும்பி வாங்கிற ‘ஆம்பிள்ளை மனிசன்’ ஆராவது இருந்தால் காட்டுங்கோவன் பார்ப்பம்?

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# தமிழ்மக்களுக்கு இந்திய உதவி; நாடாளுமன்றக் குழு ஆராயும்

**- ரி.கே.எஸ் இளங்கோவன் -**

இலங்கை தமிழ் மக்களுக்காக இந்திய அரசு முன்னெடுக்கும் உதவித் திட்டங்கள் உரிய முறையில் மக்களை சென்றடைகின்றதா என்பது குறித்து ஆராயும் வகையில் இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அடுத்த வாரம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.கே.எஸ்.இளங்கோவன் கருத்து வெளியிடுகையில், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் திட்டங்கள் எப்படிச் செயற்படுகின்றன என்பதை கண்காணிப்பதற்காக நாடாளுமன்றக் குழு இலங்கை வருகின்றது. அந்தக் குழுவில் நானும் ஒரு உறுப்பினராக வருகின்றேன் எனக் குறிப்பிட்டார்.

மேலும் தமிழகத்தில் இருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய ஏழு பேர் வேறு கட்சிகளில் இருந்து வருகை தருகின்றனர். இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் இந்தக் குழுவிற்கு தலைவராக வருகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழ் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு இந்திய அரசு வழங்கும் திட்டங்கள் சென்றடைகின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ளவும், அவர்களுடைய பிரச்சினைகள், பாதுகாப்பு குறித்து ஆராய்வதும் எங்கள் விஜயத்தின் நோக்கமாகும்.

இந்திய இலங்கை அரசுகள் இலங்கை தமிழ் மக்களின் வாழ்வுக்கு உரிய உத்தரவாதம் வழங்கச் செய்யவும், அது குறித்து பேசவும் செய்வோம். அது குறித்து இன்னும் முடிவாகவில்லை, இலங்கை வருவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூடி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிடுகிறார்.





அமெரிக்க போர்க் கப்பலில் சென்னை வந்துள்ள அமெரிக்க படை வீரர்கள் கடந்த சில தினங்களாக சென்னையில் சமூகப் பணியாற்றி வருகின்றனர். ராயபுரம் வந்த அமெரிக்க கடற்படை வீரர்கள், அன்னை தெரசா விடுதியில் மரங்களை நட்டு, பராமரிப்பு பணியில் ஈடுபட்டதனைக் காணலாம்.

# குஜராத் மதக்கலவர வழக்கு; 23 பேர் குற்றவாளிகளாக தீர்ப்பு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் பத்தாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற மதக்கலவரங்களில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட வழக்குத் தொடர்பில் 23 பேர் குற்றவாளிகள் என நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

அந்தக் கலவரங்களின் போது பெண்கள், சிறார்கள் உட்பட அந்த 23 முஸ்லிம்கள் ஒரு வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்த போது, அந்த வீட்டுக்கு தீ வைத்த கூட்டத்தின் ஒரு பகுதியினரே தற்போது குற்றவாளிகள் என்று நீதிமன்றத்தால் கண்டறியப் படுள்ளார்கள்.

குஜராத்தில் இந்து யாத்திரிகர்கள் சென்ற ஒரு ரயில் ஒரு கூட்டத்தால் தீ வைக்கப்பட்டதை அடுத்து அங்கு மதக் கலவரம் வெடித்தது.

அந்த வன்முறைகளில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இது குஜராத்தில் அந்தச் சமயத்தில் இடம்பெற்ற மதக்கலவரங்கள் குறித்து இந்திய உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழுவால் விசாரிக்கப்பட்ட மூன்றாவது சம்பவமாகும்.

# ஹிந்தி தேசிய மொழி இல்லை; மெரினாவில் இளைஞர்கள் பரப்புரை

சென்னை - மெரினா கடற்கரையில் ஹிந்தி இந்தியாவின் தேசிய மொழி அல்ல என்ற உண்மையை ஆதாரங்களுடன் தமிழர்களுக்கும், பிற மொழி இனத்தவர்களுக்கும் தமிழர் பண்பாட்டு நடுவம் எடுத்துக் கூறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.




இது தொடர்பாக தமிழர் பண்பாட்டு மையம் தெரிவிக்கையில், ஹிந்தி மொழி இந்தியாவின் தேசிய மொழி அல்ல என்பதை குஜராத் உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தி தீர்ப்பளித்துள்ளது. ஹிந்தி மொழி பெரும்பாலான மக்களால் இந்தியாவின் பல மாநிலங்களில் பேசப்பட்டாலும் அதனை தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறான அதிகாரபூர்வ அறிவிப்பு அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெறவில்லை என்றும் குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதிகள் விளக்கமளித்துள்ளனர்.

இந்த வழக்கு குஜராத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி முகோபாத்யாயா தலைமையிலான நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஹிந்தி இந்தியாவின் ஆட்சி மொழி மட்டுமே தவிர அது தேசிய மொழி அல்ல. இந்தியாவின் பெரும்பாலான மக்களால் ஹிந்தி மொழி பேசப்பட்டாலும் அதனை தேசிய மொழி என்று வாதிடுவதை ஏற்க முடியாது. இந்திய அரசமைப்புச் சட்டம், ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக மட்டுமே அங்கீகரித்துள்ளதே தவிர தேசிய மொழியாக அறிவிக்கவில்லை. அவ்வாறு எந்த அறிவிப்பும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதற்கான ஆதாரங்களும் ஏதுமில்லை.எனவே ஹிந்தி என்பது ஆட்சி மொழி மட்டுமே தவிர அது தேசிய மொழி அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# ஜனவரியில் இராணுவ நகர்வு; விதி மீறிய நடவடிக்கை அல்ல

(புதுடில்லி)

புதுடில்லியை நோக்கி ஜனவரி மாதம் இராணுவம் நகர்த்தப்பட்டது தொடர்பாக நாடாளுமன்ற நிலைக்குழு முன்பாக பாதுகாப்பு அமைச்சக செயலாளர் சசிகாந்த் சர்மா ஆஜராகி விளக்கம் அளித்துள்ளார். ஜனவரி மாதத்தில் இராணுவம் மேற்கொண்டது வழக்கமான நடவடிக்கையே என்றும் அவர் விவரித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் புதுடில்லியை நோக்கி இராணுவத்தை நகர்த்த தலைமைத் தளபதி வி.கே.சிங் உத்தரவிட்டிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதனை பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தலைமைத் தளபதி ஆகியோர் மறுத்திருந்தனர்.


இதனைத் தொடர்ந்து இந்த விவாகரம் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு நாடாளுமன்ற நிலைக் குழுவானது பாதுகாப்பு செயலருக்கு உத்தரவிட்டிருந்தது. இதைத் தொடர்ந்து நிலைக்குழு முன்பு ஆஜரான பாதுகாப்பு செயலர் சசிகாந்த், இராணுவம் மேற்கொண்டது வழக்கமான நடவடிக்கை என்றும் இது தொடர்பாக அரசிடம் எதுவித அனுமதியும் பெறத் தேவையில்லை என்றும் விவரித்துள்ளார். இந்த நடவடிக்கையில் எந்த விதமான விதிமீறலும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் இராணுவ தலைமைத் தளபதி வி.கே.சிங்கும் நிலைக் குழு முன்பு ஆஜராகி விளக்கம் அளித்ததாக கூறப்படுகிறது.

# இந்திய ஆளில்லா விமானம் பாக்கு நீரிணையில் கண்காணிப்பு

(சென்னை)

பாக்கு நீரிணை மன்னார் வளைகுடா கடல் கண்காணிப்புப் பணியில், ஆளில்லா சிறிய ரக விமானத்தை, இந்திய கடலோர விமானப் படையினர், இன்று முதல் ஈடுபடுத்த உள்ளனர். இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளியில், இந்திய கடலோர விமானப்படைத் தளம் உள்ளது. பாக்கு நீரிணை மன்னார் வளைகுடா கண்காணிப்புப் பணியில், தற்போது மூன்று ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. இந்நிலையில், நவீன தொழிநுட்பத்துடன் கூடிய ஆளில்லா சிறிய ரக விமானம் (ஐ.என்.ஏ.எஸ்-344), இன்று முதல், பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது. இதன் தொடக்க விழா, இன்று உச்சிப்புளியில் நடக்கிறது.



இது குறித்து, கொமாண்டர் வினித் ஆனந்த் கூறிய தாவது: கிழக்கு பிராந்தியத்தில், முதன்முறையாக, ஆளில்லா விமானம் ஈடுபடுத்தப்பட உள்ளது. இது, "ரிமோட்" மூலம், கன்ட்ரோல் ரூமில் இருந்து இயக்கப்படும். தினமும், 10 -12 மணி நேரம், ரோந்தில் ஈடுபடுத் தப்படும். இதில், நவீன ராடார், கேமராக்கள் உள்ளன. கண் காணிப்புப் பணியில் தற்போது, இரண்டு ஆளில்லா விமானங் களும், விரைவில் மேலும் இரு விமானங்களும் ஈடுபடுத்தப் படும். மீட்புப் பணி, பேரிடர் காலங்களில், விசைப் படகுகள் காணாமல் போனால், அந்த இடத்தை கண்டுபிடிக்க, இந்த விமானங்கள் பயன்படுத் தப்படும் என்றார்.

# புதிய கட்டுப்பாட்டு மையத்தால் செயற்கைக்கோள் கண்காணிப்பு

(சென்னை)

1850 கிலோ எடையுள்ள உளவு செயற்கைக்கோள் ரிசாட்-1 இந்திய ரொக்கெட் மூலம் இந்த மாதம் விண்ணில் ஏவப்பட உள்ளது. இந்தச் செயற்கைக்கோளை சிறிஹரிகோட்டாவில் புதிய கட்டுப்பாட்டு மையம் கண்காணிக்க உள்ளதாக இஸ்ரோ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய கட்டுப்பாட்டு மையத்தை குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் இந்த மாதம் தொடங்கி வைத்தார். அடுத்ததாக ரொக்கெட் ஏவுவது புதிய மையத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படும். அந்த ரொக்கெட் முதல் ஏவுதளத்தில் இருந்து ஏவப்படும் என இஸ்ரோ ஊடகத் தொடர்பு இயக்குநர் சதீஷ் தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் மீள்குடியமர்வு; இராஜதந்திர நடவடிக்கை தேவை

இலங்கையில் தமிழ் மக்களின் துரித மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு தொடர்பில், இந்திய அரசியல் மற்றும் ராஜதந்திரரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மார்சிச குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

கட்சியின் 20ஆவது மாநாட்டின் போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழின பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என இந்தத் தீர்மானத்தின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களுடன், அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கக்கூடிய சுதந்திரத்துடன், சிறுபான்மை தமிழ் மக்கள் வாழ வழி செய்ய வேண்டும் என கம்யூனிஸட் கட்சி, இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் குறித்தும், நேரடி விசாரணைகளை நடத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் இந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# உயிரணுக்கள் தானம் மூலம் 600 குழந்தைகளுக்கு தந்தை



உயிரணுக்களைத் தானம் செய்ததன் மூலம் 600 குழந்தைகளுக்கு விஞ்ஞானி ஒருவர் தந்தையாகியுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் உயிரணு தானம் மூலம் பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

கடந்த 1940ஆம் ஆண்டில் இருந்தே இந்த முறை வழக்கத்தில் இருந்துள்ளது. இவ்வாறு குழந்தை பெறுபவர்கள் மற்றும் உயிரணு தானம் வழங்கியவர்கள் பெயர்கள் இரக்சியமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் விஞ்ஞானி ஒருவருக்கு உயிரணு தானம் மூலம் 600 குழந்தைகள் பிறந்துள்ள தகவல் தற்போது வெளியாகி உள்ளது. அவரது பெயர் பெர்டோல்டு வியஸ்னர்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் லண்டனில் சொந்தமாக கருத்தரித்தல் மைய மருத்துவமனை ஒன்றை நடத்திவந்தார்.

இந்த மையத்தில் உயிரணு தானம் வழங்கியதன் மூலம் 1500 குழந்தைகள் பிறந்துள்ளன. அவற்றுள் 600இற்கும் மேற்பட்ட குழந்தைகள் விஞ்ஞானி வியஸ்னர் உயிரணுவின் மூலம் பிறந்தவை என தெரியவந்துள்ளது.

இவர்களில் இரட்டையர்களும அடங்குவர். கனடாவை சேர்ந்த டாக்குமெண்டரி சினிமா தயாரிப்பாளர் பார்ரி ஸ்டீவன், லண்டன் வக்கீல் டேவிட் கோலன்ஸ் இது குறித்து ஆய்வு நடத்தி இந்த ரகசியத்தை கண்டுபிடித்தனர்.

விஞ்ஞானி வியஸ்னர் ஆண்டுக்கு 20 முறை உயிரணு தானம் செய்துள்ளார். கடந்த 1940ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரை அதாவது 20 ஆண்டுகள் தானம் செய்து இருக்கிறார். இவர் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 1972ஆம் ஆண்டு இறந்துவிட்டார்.

அமெரிக்காவைச்சேர்ந்த ஒருவரின் உயிரணு தானம் மூலம் 150 குழந்தைகள் பிறந்துள்ளன. அதுவே உலக அளவில் அதிக அளவாக கருதப்பட்டது. அந்த சாதனையை விஞ்ஞானி வியஸ்னர் முறியடித்துள்ளார்.

மேலும் இதே கருத்தரித்தல் மையத்தில் இவருக்கு அடுத்த படியாக மற்றொருவர் அதிகம் பேருக்கு உயிரணு தானம் செய்துள்ளார். ஆனால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

# 27 வருடங்களின் பின்னர் துருக்கி பிரதமர் சீனா விஜயம்



துருக்கிய பிரதமர் ரிசெப் தாயிப் ஏர்கோடன் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவுக்குச்சென்றுள்ளார்.

சிரியா விவகாரம் மற்றும் சீனாவின் உய்குர் பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் முரண்பாடுகள் உள்ள போதிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக, அரசியல் உறவுகளை விருத்தி செய்வதற்கு இவ்விஜயம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 27 வருடங்களில் துருக்கிய பிரதமர் ஒருவர் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும்.

பிரதமர் ஏர்கோடனுடன் 300 வர்த்தகர்களும் சீனாவுக்கு வந்துளளதாக சீன அரசின் உத்தியோக பூர்வ செய்திச் சேவையான ஸின்ஹுவா தெரிவித்துள்ளது.

எரிசக்தி, நிர்மாணத்துறை, வாகனங்கள், வங்கி, தகவல் தொடர்புத்துறை என்பனவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைக்க முடியும் என சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஏர்கோடன் கூறியிருந்தார்.

உலகச் செய்திகள்

# சிரிய அரசின் நிபந்தனைகள் கிளர்ச்சியாளர்களால் நிராகரிப்பு

## – அதிகரிக்கிறது பதற்றம்

சிரிய அரசாங்கத்தின் இறுதி நேர சமாதானத் திட்டத்தை, சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போராளிகள் குழுவின் தலைவர் ஒருவர், தாங்கள் ஐக்கிய நாடுகள் சபை அல்லது அரேபிய ஒன்றிய நாடுகளுடன் தொடர்பு கொள்ள விரும்பும் அதே வேளை, நேரடியாக சிரிய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சிரிய அரசாங்கம் மோதல் தவிர்ப்பு தொடர்பிலான எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றை போராளிகள் குழுவிடம் இருந்து கோரியது.

அத்துடன், வெளிநாடுகள் இந்தக் குழுவுக்கு நிதி வழங்க கூடாது எனவும் கோரி இருந்தது.

எனினும் இது சிரியாவின் ஜனாதிபதி பசார் அல் அசாட்டின் ஏமாற்று வித்தை என கிளிர்சசியாளர்கள் குழுவின் தலைவர் ரியாட் அல் அசாட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிரியா தொடர்பான சர்வதேச அமைதித்திட்டம் குறித்த சந்தேகங்கள் வலுத்து வரும் நிலைமையில், சிரியாவின் எல்லைப் பகுதிகளில் பதற்றங்கள் அதிகரித்துள்ளன.



சிரியப் படையினர் துருக்கிக்குள் உள்ள அகதி முகாம்களில் உள்ளவர்கள் மீது சுட்டதில் அங்கே மூவர் காயமடைந்துள்ளனர். துருக்கிய வெள்யுறவுச் செயலகம் இதைக் கண்டித்துள்ளது.

சிரியாவுக்கும் லெபனானுக்கும் இடையேயான எல்லைப் புறத்திலும் சிரியப் படைகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி லெபனான் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இதனிடையே சிரிய அரசும் எதிர்த்தரப்பினரும் அமைதி உடன் படிக்கையின் கீழ் தாங்கள் அளித்த உறுதிமொழிகளை காப்பாற்ற வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

சிரியாவின் வெளியுறவு அமைச்சர் வாலித் அல் முஆலம ரஷ்யாவுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள நிலையில், சீனாவின் இந்த அறிக்கை வந்துள்ளது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக சிரியாவில் மோதல்கள் நடைபெற்று வரும் வேளையில், சீனாவும் ரஷ்யாவும் சிரிய அரசை தீவிரமாக ஆதரித்துவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சோமாலியா குண்டு வெப்பில் 12பேர் உயிரிழப்பு

சோமாலிய சிறப்பங்காடி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

30இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சோமாலியாவின் பய்டோவா நகரில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.


பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுள், அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# கண்காணிப்பு செயற்கைக்கோள் தயார்; சுட்டு வீழ்த்தினால் கடும் விளைவு

## - வடகொரியா எச்சரிக்கை

வடகொரியாவின் கண்காணிப்பு செயற்கைக்கோள், விண்ணில் செலுத்துவதற்கு தயார்நிலையில் ஏவுதளத்தில் வைக்கப்பட்டுள்ளது. வடகொரியா ஏவுகணை சோதனையை நடத்தி வருகிறது என பல்வேறு நாடுகளும் குற்றம்சுமத்தி வரும் வேளையில், வெளிநாட்டு பத்திரிகையாளர்களை அழைத்து செயற்கைக்கோளை காண்பித்து நேரில் விளக்கம் அளித்துள்ளது.



இந்தச் செயற்கைக்கோளை வடகொரியா வரும் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதிக்குள் எந்தநேரத்திலும் விண்ணில் செலுத்தலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வானிலை குறித்த ஆய்வுகளுக்காகவும், இயற்கை வளங்கள் குறித்த தகவலைச் சேகரிப்பதற்காகவும் இந்த செயற்கைகோளை விண்ணில் செலுத்தவுள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது. மேலும செயற்கைக்கோளை எந்த நாடாவது சுட்டுவீழ்த்தினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ஆங் சான் சூகி 23இல் பதவி ஏற்பு



மியான்மர் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி நாடாளுமன்ற உறுப்பினராக ஏப்ரல் 23ஆம் திகதி முதன்முறையாக பதவியேற்க உள்ளார்.

ஏப்ரல் முதலாம்திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி 43 இடங்களில் வெற்றி பெற்றது.

இதையடுத்து இந்த மாத இறுதியில் நடைபெற உள்ள நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது உறுப்பினராக பதவியேற்குமாறு அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.




அமெரிக்காவின் டன்கானோக் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், ஆதரவாளர்களுடன் கைகுலுக்கும் குடியரசு கட்சி அதிபர் வேட்பாளரும், மசாசூசெட்ஸ் மாகாண முன்னாள் ஆளுனருமான மிட் ரோம்னி.

# எகிப்தில் ஜனாதிபதித்தேர்தல்

எகிப்தில்ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற் கான வேட்பாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியை அடுத்து ஜனாதிபதித் தேர்தல் முதற தடவையாக நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 23 பேர் தங்களைப் பதிவு செய்துள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி இந்தத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி ஹொஷ்னி முபாரக் பதவி விலக்கப்பட்டதை அடுத்து எகிப்தில் அரசியல் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. முன்னர் எகிப்தில் தடை செய்யப்பட்டிருந்த பல கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நந்தன வருட இராசி பலன்கள்

## கன்னி



உத்தரம் 2, 3, 4 பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: ப, பி, பூ, ஷ, ண, ட, பே, போ உள்ளவர்களுக்கும்)

குருவின் பார்வை வந்தவுடன் கொடுக்கும் சுகங்கள் ஏராளம்!

உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து உன்னத வாழ்வை அமைத்து கொள் ளும் கன்னிராசி நேயர்களே!

வரப்போகும் நந்தன வருடம் வளர்ச் சியினை கூட்டுமா? தரப்போகும் யோகங்களை தடையின்றி தந்திடுமா? என்று சிந்தித்து கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த ஆண்டு, குருப் பெயர்ச்சிக்கு பின்னால் கூடுதலான நற்பலன்களை வழங்கும் என்றே சொல்ல வேண்டும்.

புத்தாண்டு தொடங்கும் போது, எட்டிலே குரு சஞ் சரித்தாலும் 34 நாட்கள் கழித்த பின்னால், முன்னேற் றத்தின் முதல் படிக்கு செல்லப்போகி றீர்கள்.

வருட தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் நீசம் பெற்றாலும், கேந் திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என் பதால், நீச புதன் நினைத்த காரி யத்தை நிறைவேற்றி வைக்கும். உற வினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படப் போகிறார்கள்.

ஜென்ம சனியின் ஆதிக்கம் இருப்ப தால், எப்பொழுதும் மனக்குழப்பம் மட்டும் இருக்குமே தவிர, பணப் புழக் கத்திற்கு குறைவிருக்காது.

மாமன், மைத்துனர் வழியில் ஒத்து ழைப்பு கிடைத்து மகிழ்ச்சி அடை வீர் கள். அவர்களின் இல்ல விழாக்களை முன் நின்று நடத்தி வைப்பீர்கள்.

செவ்வாய், சனி சேர்க்கை காலத் தில் சிறப்பு பரிகாரம் தேவை. மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரமிது. வாகன மாற்றம், இடமாற் றங்கள், எதிரிகளின் தொல்லைகளை எல்லாம் சந்திக்க நேரிடலாம். அந்த நேரத்தில் கை கொடுப்பதெல்லாம் ஆலய வழிபாடு ஒன்றுதான்.

உங்களுக்கு இந்த நந்தன ஆண்டு எப்படியிருக்கும் என்பதை பார்ப்போம்.

### ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை

லாபாதிபதி சந்திரனை குரு பார்த்து இந்த ஆண்டு தொடங்குகிறது. அது மட்டுமல்ல, 3, 8இற்கு அதிபதியான செவ்வாயையும் குரு பார்க்கிறது. எனவே, சிக்கல்கள் தீரும், சிரமங்கள் குறையும். பக்கபலமாக இருப்பவர் கள் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பர். முக்கிய புள்ளிகளை சந்தித்து, முன்னேற்றங் களை வரவழைத்து கொள்வீர்கள்.

ஜென்ம சனி வக்ரம் பெறுவதால், சனி வழிபாடும், சனிக்கவசப் பாரா யணமும் தித்திக்கும் விதத்தில் உங் கள் வாழ்க்கையை அமைத்துகொடுக் கும்.

### ஒளிமயமான எதிர்காலம் தரும் குருப்பெயர்ச்சி

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு பக வான் உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத் தில் சஞ்சரிக்க போகிறார். அசுரகுரு வீட்டில் தேவ குரு சஞ்சரித்தாலும், அதன பார்வை உங்கள் ராசியில் முழுமையாக பதிவதால், உடல் நல மும் சீராகும். அது மட்டுமல்லாமல், 1, 3, 5 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது.

ஒன்பதில் சஞ்சரிக்கும் குரு பக வான் உங்கள் ராசிக்கு 4, 7இற்கு அதி பதியாக விளங்குகிறார். தொழில் தொடங்க மூலதனம் பெற்றோர் வழி யிலும், உற்றார், உறவினர்கள் வழியி லும் வந்து சேரும். எதை தொட்டாலும் தடைகளும், தாமதங்களும் வந்து கொண்டிருக்கிறதே என்ற கவலை இனி ஓயும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச் சுறுத்தல் அகலும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத தில் பதிவதால், உடன்பிறப்புகள் உற் சாகத்தோடு வந்திணைந்து, உதவிக்க ரம் நீட்டுவர். எதையோ மனதில் நினைத்து கொண்டு, சரியாக பேச வில்லையே என்று நினைத்த சகோத ரர்கள் எல்லாம், தானாகவே வந்து பேசி, தக்க ஆலோசனைகளையும் கூறு வர். பகைகளை உறவாக்கும் இந்த நேரத்தில் வழக்கு போட்டவர்கள் கூட வாபஸ் பெறுவர்.

குருவின் பார்வையால் புத்திர ஸ்தா னம், பூர்வ-புண்ணிய ஸ்தானம் எல்லாம் புனிதமடைகின்றது என்பதால், சொத்து வாங்கும் யோகம் முதல் சுகபோக மான வாழ்க்கை நடத்த வீடுகட்டி குடி யேறுவது முதல் ஒவ்வொன்றாக நடை பெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர் கள்.

திகைக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

### பாம்பு கிரக பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?


கார்த்திகை 17ஆம் திகதி துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேது வும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங் கள் ராசியை பொறுத்தவரை இரண் டில் ராகுவும், எட்டில் கேதுவும் சஞ் சரிக்கிறார்கள்.

தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு, தன வரவை தாராளமாக அள்ளிக் கொடுக்கும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது வின் பலத்தால் ஆரோக்கியத்திற் கென்று ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். தொழில கூட்டாளிகளில் சில மாற்றங்களை செய்ய நேரிடும்.

தொல்லை தந்த எதிரிகளின் பலம் கூடும் இந்த நேரத்தில் நல்லவர்கள் யார்? பொல்லாதவர்கள் யார்? என் பதையும் இனம் கண்டு கொண்டு செயல படுவது நல்லது. கோவில் திருப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உங்களுக்கு அனுகூலம் தரும் சர்ப்ப ஸ்தலத்தை தேர்ந்தெடுத்து, சர்ப்ப சாந் தியை முறையாக செய்தால் அற்புத மான வாழ்க்கை அமையும்.



தாமதத்தின் பிடியில் சிக்கி தவிக்க லாம்.

அதே நேரத்தில் ஆறுக்கு அதிபதி யாகவும் சனி விளங்குவதால், உத்யோக உயர்வு, ஊதிய உயர்வு போனறவை கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். விரும்பிய இடத்திற்கு இடமாற்றங் கள் வந்து சேரலாம். விருப்ப ஓய்வு பெற நினைப்பவர்களுக்கு கணிசமான தொகை கைக்கு வந்து சேரும். இந்த காலத்தில் சனி ப்ரீதி செய்வது நல்லது.

புதன்கிழமை தோறும் விஷ்ணுவை யும், இலக்குமியையும் வழிபட்டு வாருங் கள். அஷ்டலட்சுமி கவசத்தை வெள ளிக்கிழமை தோறும் இல்லத்தில் படித்து, பஞ்சமுக விளக்கேற்றி, வழி பாடு செய்தால் செல்வ நிலை உயரும்.

ஆயினும், ஜென்மச்சனியின் ஆதிக் கம் உங்கள் ராசியில் அதிகமாகவே இருக்கிறது. எனவே, ஒரு சில காரி யங்களை ஒரு முறைக்கு இரு முறை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாக லாம்.

### செவ்வாய், சனி சேர்க்கை காலம்!

ஆனி 9ஆம் திகதி முதல் ஆடி 29 ஆம் திகதி வரை உங்கள் ராசியி லேயே செவ்வாயும், சனியும் ஒன்று கூடுகிறார்கள். இந்த காலம்தான் உங்களுக்கு எச்சரிக்கை அதிகம் தேவைப்படும் காலமாகும். உடலாலும் தொல்லை, உள்ளத்தாலும் தொல்லை, உடன் இருப்பவர்களாலும் தொல்லை என்று ஒவ்வொரு நாளும் பிரச்சினை களை சந்திக்க நேரிடலாம்.

வாகனத்தில் செல்லும்போது கவ னம் அதிகம் தேவை. பழைய வாக னத்தை மாற்ற நினைப்பவர்கள் மாற்றி கொள்வது நல்லது. மாற்ற இயலாத வர்கள் அதற்குரிய பரிகாரங்களை செய்து விட்டு, தொடர்ந்து வாகனங் களை வைத்து கொள்ளலாம்.

### துயரங்களைப் போக்குமா துலாம் ராசி சனி!

ஆவணி 27ஆம் திகதி முதல் துலாம ராசிக்குள் உச்சம் பெறும் சனி உங் களுக்கு இரண்டாமிடத்தில் உச்சம் பெறு வதால், குடும்ப தேவைகள் பூர்த்தியா கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

ஆடை, ஆபரண சேர்க்கை அதிக ரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். மாற்றினத்தவர்களும் கைகொடுத்து உதவுவர்.

### வக்ர குரு வளர்ச்சியை கொடுக்குமா?

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24ஆம் திகதி வரை ரிஷபத்தில் சஞ் சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் ராசியை பொறுத்தவரை 4, 7இற்கு அதிபதியாக குரு விளங்கு வதால், வக்ர காலம் வளர்ச்சிக்குரிய காலமாக இருக்குமென்றே கருதலாம்.

குடும்ப பிரச்சினைகள் ஒவ்வொன் றாக நல்ல முடிவிற்கு வரும். கொடுக் கல் - வாங்கல்களில் லாபம்கிடைக்கும். அஞ்சல் வழி அனுகூலமும், அன்னிய தேச தொடர்பும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். வாழ்க்கை துணை வழியே வரவு வந்து சேரும். இந்த காலத்தில் திசை மாறிய தென்முக கடவுள் வழிபாடு

### வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம். திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத் தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப் படையில் சனி 5, 6இற்கு அதிபதி யாக விளங்குகிறார். எனவே, பூர்வீக சொத துக்கள் விற்பனையில் திடீர் மாற்றங் கள் வந்து சேரலாம். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகள் கை நழுவி செல்லலாம். பங்காளி பகைகளை வளர்த்து கொள்ளாமல் பார்த்து கொள் வது நல்லது. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவோ, கடல் தாண்டும் முயற சிக்காகவோ, நீங்கள் நிறைய தொகையை செலவிட்டும் காரியம் கை கூடாமல்

### மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!

நந்தன வருடம் கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு குடும்ப கமை கூடும். கொடுக் கல்-வாங்கல்களில் ஏமாற்றங் க ளை சந்திக்காதிருக்க விழிப்புணர்ச்சி தேவை. ஜென்ம சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வதுதான் நல்லது. உங்கள் ராசியில் சனியும், செவ்வாயும் கூடும் நேரத்தில்; அதா வது ஆனி 9 முதல் ஆடி 29 வரை மிக மிக விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத்திலும் பாதிப்புகள் ஏற் படலாம். அடுத்தவர்களாலும் பிரச்சி னைகள் உருவாகும். உறவினர் பகை அகலவும், உடனிருப்பவர்களால் ஒத்து ழைப்பு கிடைக்கவும் சுய ஜாதக ரீதி யான பரிகாரங்களை தேர்ந்தெடுத்து செய்வதுதான் நல்லது. ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு பெண் குழந் தைகளின் பூப்புனித நீராட்டு விழாக் களும், உடன் பிறப்புகள் வழியில் விவாக பேச்சுக்களும் வந்து சேர லாம்.

(தொடரும்...)

## கூட்டமைப்பின்...

நடைமுறையில் அவ்வாறில்லை என்பது வேறுகதை.

சிங்கள கடும் போக்கு அரசியல் வாதிகளும், சிங்கள ஊடகங்களும் கூட்டமைப்பின் உண்மை நிலையை விட அதனைப் பெருப்பித்துக் காட்டவே முயற்சிக்கின்றன. அரசாங்கத்தின் இருப்பிற்கு அது தேவையாக இருப்ப தனால் அதுவும் இப்போக்கினை ஊக்கு விக்கின்றது. இந்நிலையில் கூட்டமைப் பும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து மேதினம் நடாத்துவது சிங்கள மக்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியினைப் பலவீனப்படுத்தவே பார்க்கும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் இதுவே நடந்தது. சரத் பொன்சேகாவிற்கு கூட்டமைப்பு பகிரங்கமாக ஆதரவு கொடுத்ததினால் தான் மகிந்தர் எதிர் பார்க காத அளவு வெற்றி பெற்றார். இலங் கைத்தீவு சமூகமளவில் இரண்டாகப் பிரிந்திருக்கின்றது இந்நிலையில் இப்போக்கு எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விருப்பம் இருந்தாலும், விருப்பம் இல்லாவிட்டாலும் அரசியல் தீர்வு வரும் வரை அடிக்கடி தமிழ்த் தேசிய வாதத் தோடு, தான் நிற்கின்றேன் எனக் காட்ட வேண்டிய தேவை உண்டு. இல்லா விட்டால் தமிழ் மக்களினது வாக்குகள் அவர்களுக்கு கிடைக்கப் போவதில்லை. இந்நிலையில் கூட்டமைப்புடன் சேர்ந்து மேதினம் நடாத்துவது ஐக்கிய தேசியக் கட்சியை கடுமையாக பாதிக்கவே செய்யும். ஏற்கனவே தென்னிலங்கை யில் ஐக்கிய தேசியக் கட்சி கந்தை யாகிப் போகும் நிலையிலேயே உள் ளது. கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் ஒரு பொதுக் கூட்டத்தையே அமைதி யாக நடாத்த முடியாத சூழ்நிலை யினை உருவாக்கியுள்ளது. இணைந்த மேதினம் மேலும் கந்தையாக்கி போகக் கூடிய சூழலை உருவாக்கும். ரணிலின் தலைமை பலவீனப்பட்டு சஜித் பிரே மதாசா மேல்நிலைக்கு வரக் கூடிய வாய்ப்பும் ஏற்படலாம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு குடாநாட் டில் பெரிய வாக்கு வங்கி கிடையாது. விஜயகலா மகேஸ்வரன் வருகை தரு அரசியல்வாதியாக மட்டும் இருப்பத னால் மே தினத்திற்கு அதிக மக்களைக் கொண்டு வரும் ஆற்றலும் அவருக் கில்லை. கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்றதனால் மக்களை மேதினத்திற்கு கொண்டு வரும் ஆற்றல் அதற்கு உண்டு என ஐக்கிய தேசியக் கட்சி கணக்குப் போடுகின்றது. யதார்த்தம் அதுவல்ல.

ஒரு ஐக்கியப்பட்ட குரல் தமிழ் மக் களுக்கு இருக்க வேண்டும் என்பதற் காக தமிழ் மக்கள் வாக்களித்தார்களே தவிர கூட்டமைப்பின் மீது பெரிய காதல் எதுவும் மக்களுக்கு கிடையாது. கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பி னர்கள் மட்டும் சமூகமளிக்கக் கூடும். அவர்களிலும் பலர் வட மாகாண சபை உறுப்பினர் கனவில் இருப்பதனால் ஐக்கிய தேசியக் கட்சி மேதினத்தில் கலந்து கொள்ள தயக்கமே காட்டுவர். பாட்டுக் கச்சேரிகள் இடம்பெற்றால் மக்கள் கலந்து கொள்ளக் கூடும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்வதால் அதன் வங்குரோத்து நிலை வெளியில் தெரிய வரும். ஒரு தமிழ்ப் பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேடையைப் பயன்படுத்தும் நிலையில் தான் கட்சி இருக்கின்றது என்றால் அந்தக் கட்சி தேவையில்லை என்ற நிலை உருவாகலாம்.

# கிளிநொச்சியில் 370 மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் கிடைக்கிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கான ஏப்ரல் மாதத்திற்கான எரிபொருள் மானிய முத்திரைகள் கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வழத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருவதாக அதன் உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 370 பேரிற்கு கடற்றொழில் எரிபொருள் மானிய முத்திரைகள் தமது திணைக்களத்திற்கு வழங்கியிருப்பதாகவும் அவற்றில் 250 முத்திரைகளுக்கு மேல் விநியோகிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே மார்ச் மாதத்திற்கு 243 பேரிற்கு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு அவற்றுக்கான எரிபொருள் விநியோகமும் முற்றுப் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் எரிபொருள் மானிய முத்திரைகளுக்கான எரிபொருள் பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் மட்டும் விநியோகிக்கபட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

# பெங்களூரை வென்றது கொல்கத்தா



பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஐந்தாவது ஐ.பி.எல். ருவெண்ரி 20 கிரிக்கெட் தொடரில நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் கம்பீர் 39 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் முரளிதரன், சகீர்கான், வினய்குமார் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வினய்குமார் 25, விடடோரி 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய எல்.பாலாஜி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# சூழலை மாசுபடுத்திய பலருக்கு அபராதம்

(திருநெல்வேலி)

குப்பைகளைக் கொட்டி சுகாதார சீர்கேடான முறையில் நடந்துகொண்ட ஆறு பேருக்கு யாழ். நீதவான் மா.கணேசராசா தலா 1000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். நேற்று இவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் இவர்களுக்கான அபராதம் விதிக்கப்பட்டது. யாழ். கஸ்தூரியார் வீதி, சோமசுந்தரம் வீதி, ராசாவின் தோட்டம், பேருந்து நிலைய வீதி, சுபாஸ் ஹோட்டல் அருகாமை போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களே இவர்களாவர்.

அத்துடன் சின்னக்கடைப் பகுதியில் விளம்பரப் பலகையை வீதியில் வைத்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய சின்னக்கடையைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ். நீதவான் ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். வீதியில் கல் மற்றும் மணல் பறித்து வீதிப்போக்குவரத்திற்குத் தடை ஏற்படுத்திய அரியாலையைச் சேர்ந்த இருவருக்கு யாழ். நீதிமன்றினால் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (137)

# விளையாட்டு உபகரணம் வழங்கல்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நல்லூர்ப் பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குப் பிற்பகல் 2.30 மணிக்கு சபை மண்டபத்தில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன என தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட விளையாட்டுக் கழகங்கள் தவறாது இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (137)

# ஆரோக்கியமற்ற அரசியல் களம்

## ஐ.நா. பேச்சாளர் வர்ணிக்கிறார்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் களநிலவரம் ஆரோக்கியமற்ற பண்புகளைக் கொண்டுள்ளமையே ஆட்கடத்தல் சம்பவங்கள் எடுத்துக்காட்டுவதாக ஐ.நா.வின் பேச்சாளர் கோர்டன் வொய்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரேம்குமார் குணரட்ணம், திமுது ஆட்டிக்கல ஆகியோர் கடத்தப்பட்டமை மற்றும் மீண்டும் அவர்கள் விடுவிக்கப்பட்டமை என்பன இலங்கை அரசியல் தன்மையின் ஆரோக்கியமற்ற அடையாளத்தை வெளிப்படுத்துகின்றது.

மேற்படி இருவர் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டமை இலங்கை அரசியல் தன்மையின் அடையாளத்தை வெளிப்படுத்துவதோடு, ஏனைய காணாமல்போன சம்பவங்களின் பண்புகளை காட்டி நிற்பதாகவும் அவர் தெரிவித்தார். யுத்தம் இடம்பெற்ற சமயத்தில் இலங்கைக்கான ஐ.நா.வின் பேச்சாளராகச் செயற்பட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல அப்பாவிப் பொதுமக்கள் காணாமல் போன சம்பவங்கள் குறித்து தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான யுத்தம் நிறைவடைந்த பின் கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடராது என மக்கள் நினைத்த போதும் அச்சம்பவங்களில் குறைவு இல்லை என கோர்டன் வொய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக காணாமல் போதல் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதையே இப்போது அவதானிக்க முடிவதாக அவர் கூறியுள்ளார். கடத்தல் தொடர்பில் உறவினர்கள் வெளி உலகிற்கு கூறியதை அடுத்தே பிரேம்குமார் குணரட்ணம் விடுவிக்கப்பட்டதாக கோர்டன் வொய்ஸ் தெரிவித்துள்ளார்.

### தபால் முத்திரை வெளியீடு

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நான்கு தபால் முத்திரைகள வெளியிடப்பட உள்ளன. ஐந்து ரூபா பெறுமதியான தபால் முத்திரைகளே இவ்வாறு புத்தாண்டு தினத்தில் வெளியிடப்பட உள்ளதாக தபால் திணைக்கள முத்திரைப் பிரிவு அறிவித்துள்ளது. சிங்களக் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்தத் தபால் முத்திரைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. எண்ணெய் தேய்த்தல், அடுப்பு எரித்தல், புண்ணிய காலத்தில் மத வழிபாடுகளில் ஈடுபடல் என்றவாறான காட்சிகள் இந்த முத்திரைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இதற்கு முன்னர் 1987 ஆம் ஆண்டு தபால் முத்திரை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தனியான மே தின...

இட்டுள்ளன. எவ்வாறெனினும், மேதினக் கூட்டம் தொடர்பில் அனைத்து இடதுசாரி கட்சிகளும் கூட்டாக இணைந்து விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என திஸ்ஸ வித்தாரண குறிப்பிட்டார்.

### கடலில் மூழ்கி...

அங்கிருந்து பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் குறித்த சடலம் கொண்டுவரப்பட்டுள்ளது. இறந்தவரின் மனைவி பிள்ளைகள் கனடாவில் வசித்துவருவதாகவும், இவர் தனியாக இங்கு வசித்து வந்துள்ளார் எனவும் நண்பர் தெரிவித்தார்.(எஸ்)

### குணரட்ணம்...

தலைவியான திமுது ஆட்டிக்கலவும் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளனர். இவரது கட்சிக் காரியாலயம் அமைந்துள்ள மடவெல பகுதியில் வைத்தே இவர் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட பின்னர் கட்சிக் காரியாலயத்தில் நடாத்தப்பட்ட செயதியாளர் மாநாட்டில் இவர் கடத்தல் பற்றி செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

தன்னைக் கடத்தியதில் அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறினார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடகமையிலுள்ள தனது வீட்டுக்கு அருகாமையில் பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டை நெருங்கிய போது வீட்டுக்கு அருகாமையில் ஒரு வெள்ளை வான் நின்றதை தான் கண்டதாக அவர் கூறினார்.

திரும்பி ஓட முற்பட்ட போதிலும் பின்னால் இரண்டு பேர் வந்ததால் தன்னால் தப்பியோட முடியாமல் போனது. வானிலிருந்து வெளியே வந்த இரண்டு பலசாலிகளான ஆண்கள் தன்னை வானுக்குள் தூக்கிப் போட்டு வாயைப் பொத்திப் பிடித்ததாக அவர் குறிப்பிட்டார். தன்னைக் கடத்தியவர்களிடமிருந்து நேற்று முற்பகல் விடுபட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த திமுது ஆட்டிகல, மேற்படி தகவலை தெரிவித்தார்.

கடத்திச் சென்றவர்கள், கட்சியின் சர்வதேச தொடர்புகள் பற்றியும் விடுதலைப் புலிகள் சார்பு புலம்பெயர்ந்தோருடன் தொடர்புகள் உண்டா? என கேட்டதாக திமுது கூறினார். கட்சிக்கு இத்தகைய தொடர்பு இல்லை என தான் அவர்களிடம் கூறியதாகவும் கட்சியின் சர்வதேச நிதி மூலங்களைப் பற்றி அறிய அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர் என்றும் திமுது கூறினார்.

அவரது குரலில் பயமும் நடுக்கமும் தொடர்ந்தும் காணப்பட்டது. கடத்தல்காரரின் ஆயுதங்கள், மொழிப் பிரயோகம், தடுத்துவைக்கப்பட்ட இடம் என்பன அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு இக்கடத்தலிலிருந்த தொடர்பை வெளிப்படுத்தியதாக அவர் கூறினார். வாகனத்தில் ரி 56 ரக துப்பாக்கிகளும் பல வாகன இலக்கத் தகடுகளும் பிஸ்டல்களும் இருந்தன. அவர்கள் தமது அதிகாரிகளை சேர் என அழைத்தனர் என அவர் கூறினார். தன்னை கடத்தியவர்கள் ஜே.வி.பி.யை புகழ்ந்து பேசியதாக கூறினார்.

கடத்தப்பட்ட குணரட்ணத்தின் முன் என்னை ஒரு முறை அழைத்துச் சென்றனர் என்று கூறிய திமுதுவிடம் ஜே.வி.பி.க்கு இதில் தொடர்பு உள்ளதென சந்தேகப்படுகிறீர்களா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார். அதற்கு பதிலளித்த அவர், "என்னால் முடிவாக எதுவும் கூறமுடியாது. ஆயினும் கடத்தியவர்களின் பேச்சிலிருந்து ஜே.வி.பி.க்கு தொடர்பு இருக்கலாமோ என சந்தேகிக்கின்றேன்" என கூறினார். தான் தடுத்து வைக்கப்பட்ட போது தனக்கு உணவு வழங்கப்பட்டதாகவும் தனக்கு உதவிக்காக ஒரு பெண் நியமிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்

அதேவேளை பிரேம்குமார் குணரத்தினம் இவர் குடிவரவுச் சட்டங்களை மீறிச் செயற்பட்ட காரணத்தினால்தான் நாடு கடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் இவர் குற்றச் செயல்களுடன் ஈடுபட்டிருந்தால் அவரை நாங்கள் நாடு கடத்தியிருக்க மாட்டோம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். கடந்த ஐந்து மாதங்களாக குணரட்னம் சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்தார். இதன் காரணமாகவே குமார் குணரட்னத்தை அவுஸ்ரேலியாவிற்கு நாடு கடத்தினோம் என அவர் குறிபபிட்டுள்ளார்.

### வீதி திருத்தத்தில்...

அதேவேளை அருகிலுள்ள கோயிலை இணைக்கும் பிறிதொரு வீதியானது திருத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதித் தவிசாளரிடம் கேட்டபோது சபை நிதியானது பத்திரகாளி அம்மன் வீதிக்கே ஒதுக்கிடப்பட்டது. ஆனால் பிரதேச சபையில் எந்த வித தீர்மானமும் எடுக்காத நிலையில் மேற்படி நிதியிலிருந்து மற்றைய வீதி புனரமைக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

### சட்டவிரோத...

வெளியாகியுள்ளதாக அவர் கூறினார். இவ்வாறு விசா அனுமதிப் பத்திரமின்றி இலங்கையில் தங்கியோரில் சிலர் வடக்கு, கிழக்கில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை, மேலும் சிலர் ஆடை வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### கல்வி நிலையங்களுக்கு...

நடாத்துவதற்கும் தடைபோட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். பாடசாலை விடுமுறை நாட்களில் மாணவர்கள் அமைதியாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மாணவர்களிடையே நற்பழக்க வழக்கங்கள் ஏற்படும், பாடசாலை முடிந்தவுடன், தனியார் கல்வி நிறுவனம், அதற்குப் பின்பு வீட்டில் படிப்பு இவ்வாறு இருக்குமபட்சத்தில் ஆன்மீக சிந்தனை அவர்களுக்கு ஏற்படுவது கடினமாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட், மதுபானம் விற்பனை செய்வதைத் தடை செய்யவேண்டும். பொது இடங்களில் மதுபானம், புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்கள் இடம்பெறாது தடுக்கவேண்டும். அதற்கு மக்கள் பொலிஸாருடன் ஒன்றிணைய வேண்டும். மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நல்லதொரு புரிந்துணர்வு ஏற்பட்டால் இதனைத் தடுக்கமுடியும். எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கலாசார சீர்கேட்டினை முற்றாகத் தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# எரிபொருள் பவுசர் கட்டணம் உயர்கிறது

## தொழிற்சங்கப் போராட்டம் வாபஸ்

(கொழும்பு)

எரிபொருள் விநியோகிப்பதற்கான பவுசர் கட்டணத்தை 21 வீதத்தினால் அதிகரிக்க இணக்கம் காணப்பட்டதையடுத்து பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர் சங்கம் நடத்த இருந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது. பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுடன் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையையடுத்து வேலை நிறுத்தத்தை கைவிட முடிவு செய்ததாக பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர் சங்கத் தலைவர் ஏ.எம்.எச். அதிகாரி தெரிவித்தார்.

எரிபொருள் ஏற்றிச் செல்வதற்கான கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரி பவுசர் உரிமையாளர் சங்கம் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தது. ஆனால் பெற்றோலிய வள அமைச்சில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் எரிபொருள் விநியோகிப்பதற்கான கட்டணத்தை 21 வீதத்தினால் அதிகரிக்க இணக்கம் காணப்பட்டது. இதனையடுத்து வேலை நிறுத்த முடிவு இடைநிறுத்தப்பட்டதோடு பவுசர் உரிமையாளர்கள் வழமை போல கடமையில் ஈடுபட்டனர்.

# பௌத்தபிக்கு வேடத்தில் கஞ்சா கடத்தியவர்கள் கைது

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அணியும் சீருடைகளை அணிந்து வாகனமொன்றில் 4 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளை கடத்திய சந்தேக நபர்கள் இருவரை வாழைச்சேனைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டி தனமன்வில பகுதியில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த வாகனம் ஒன்றிலிருந்தே 4 கிலோகிரா்ம் நிறையுடைய கஞ்சா போதைப் பொருளும் பௌத்த பிக்குகள் அணியும் சீருடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

எம்பிலிப்பிட்டி தனமன்வில பிரதேசத்தில் இருந்து கஞ்சாப் பொதிகளை ஏற்றிக் கொண்டு வாகனம் ஒன்று வாழைச்சேனை மாவடிச்சேனை பகுதி வீடொன்றில் நிற்பதாக வாழைச் சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எம். காமினி தென்னக்கோனுக்குக் கிடைத்த இரகசியத் தகவலினைத் தொடர்ந்து வாழைச் சேனை பொலிஸ் நிலையத்தின் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.காலிதீன் தலைமையில் சென்ற குழுவினர் வாகனத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர் இருவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஜயவீர தெரிவித்தார். இச்சந்தேக நபர்கள் கஞ்சாப் பொதிகளை கடத்திவரும் வேளையில் பொலிஸ் மற்றும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகப்படாத வகையில் பௌத்த பிக்குகளின் சீருடைகளை அணிந்து வந்துள்ளதாக முதல் கட்ட விசாரணைகள் மூலம தெரிய தெரியவந்துள்ளது.

# முதலைகள் சரணாலயம் அமைக்க ஏற்பாடு

இலங்கையில் முதன் முதலாக முதலைகள் சரணாலயம் ஒன்றை அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நில்வளா கங்கையிலும் மற்றும் வேறு சதுப்புநிலப் பிரதேசங்களிலும் முதலைகளால் அண்மையில் ஏற்பட்ட மனித உயிர்ப் பலிகளைத் தடுக்கும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. நில்வளா கங்கையில் சேற்று நிலத்தை உருவாக்கி முதலைகள் சரணாலயம் அமைக்கும் யோசனையை இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும முன்வைத்துள்ளார்.

இதற்கென கிரலகெலே பகுதியில் 50 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 12 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று மாத்தறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது


# மரண அறிவித்தல்

## இன்னாசிமுத்து மேரியோசவ் இம்மனுவேல் (தம்பி மாமா)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து - மேரியோசவ் இம்மனுவேல் (தம்பி மாமா) கடந்த 09.04.2012 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இன்னாசிமுத்து சூசானம் தம்பதிகளின் அன்பு மகனும், விமலாவின் அன்புக் கணவரும், மரீனா, ஐறின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி யோசபின் (கண்மணி), மேரி திரேசா (பொற்கொடி), மேரிறீற்றா (ராணி), மேரி பேணடேற் (ரத்தினம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 10.04.2012 ஆம் திகதியன்று சில்லாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுச் சில்லாலை கதிரைமாதா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தகவல் : பாலா
(மருமகன்)

(C/165)


# யாழில் கலாசார சீரழிவுகளுக்கு அரச அதிபர் காரணம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுடைய வரிப்பணத்தைப் பெற்றுக் கொண்டு மக்களுக்கு சேவை செய்யாத கலாசார உத்தியோகத்தர்கள் பணியில் இருக்க வேண்டாம். வீடுகளிற்குப் போங்கள் என அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள், முன்னிலையில் வைத்து யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கடுமையாக விமர்சித்துள்ளார்.

யாழில் அதிகரித்துவரும் கலாசாரச் சீர்கேடுகள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் நேற்று யாழ். மாட்டச் செயலகத்தில் இடம் பெற்றது இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதில் தொடர்ந்தும் அவர் உரையாற்றும்போது. யாழில் அத்தனை கலாசாரச் சீர்கேடுகளுக்கும் காரணமானவர்கள். கலாசார உத்தியோகஸ்தர்களே. மாவட்டத்தின் இன்றைய நிலைக்கும் அதனால் மாவட்டத்திற்கு ஏற்பட்டுள்ள அவப் பெயருக்கும் பொறுப்பாளிகளும் அவர்களே.

மக்களுடைய வரிப்பணத்தைப் பெற்றுக்கொண்டு சேவையினைச் செய்யாமல், வீடுகளில் பல கலாசார உத்தியோகத்தர்கள் தூங்குகிறார்கள். ஒவ்வொரு மாதமும் எமது பிரதேசத்தில் இவ்வளவு துஷ்பிரயோகம் என கணக்கு கொடுக்கிறீர்கள் அதற்காக வெட்கப்படுங்கள். மாவட்டத்தில் இத்தனை துஷ்பிரயோகமா ஏன்? எதற்காக என ஊடகங்கள் கேட்கும்போது ஆடை உரிவதுபோல அவமானமாக இருக்கின்றது.

பாரம்பரியமும் பண்பாட்டுச் செழுமையுமுள்ள யாழ்ப்பாணத்தின் கலாசாரச் சிதைவுக்கு முழுக்காரணமும் நீங்கள்தான். அதை இனியாவது நிவர்த்தி செய்து கொள்ளுங்கள் என யாழ்.அரச அதிபர் மிகவும் கடுமையாக எச்சரித்தும், விமர்சித்தும் உள்ளார்.

# கிருளப்பனையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

ஹெவலொக் வீதி கிருளப்பனைப் பாலத்திற்கு அடியில் உள்ள கால்வாயில் இருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிருளப்பனை - சித்தார்த்த வீதி சுவர்ணபாலத்திற்கு அடியில் உள்ள கால்வாயில் இருந்தே இச்சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## மோட்டார் சைக்கிள் விபத்து மூவர் காயமடைந்தனர்

எதிர் எதிராக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானது.

கோண்டாவில் முத்தட்டு மடச் சந்தியில் நேற்று இரவு 9.40 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூவர் படுகாயம் அடைந்தனர். உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். (எஸ்)

# பளையில் விபத்து உரும்பிராய் வாசி பலி

(பளை)

பளை, அரசகேணி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருமண வைபவமொன்றுக்குச் சென்று மோட்டார் சைக்கிளில் மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில், அரசகேணி பிரதேசத்தில் வீதியை விட்டு விலகியுள்ள மேற்படி மோட்டார் சைக்கிள், சுமார் 200 மீற்றர் வரை இழுபட்டுச் சென்று சேற்றுக் குழியொன்றுக்குள் விழுந்துள்ளது. இதன்போது உரும்பிராய் பிரதேசத்தைச் சேர்ந்த சிவராஜசிங்கம் ஜெயராஜ் (வயது-31) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# சுங்க விதிகளை மீறி இறக்கப்பட்ட வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

சுங்க சட்ட விதிமுறைகளை மீறி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கை சுங்கத் திணைக்களத்தின் விசேட பிரிவு மற்றும் தேடுதல் பிரிவு மேற்கொண்ட விசாரணையில் கொள்கலன் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இரு பஜிரோக்கள், ஓட்டப்பந்தயக் கார் மற்றும் பிரிதொரு மோட்டார் வாகனம் என்பவை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களின் பெறுமதி இரண்டு கோடிக்கு அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதாகக் கூறி இவ்வாறு ஜப்பானில் இருந்து வாகனங்கள் இறக்குமதி செய்துள்ளதாக இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது. வாகனம் இறக்குமதி செய்தால் அதிக வரி செலுத்த வேண்டும் என்பதற்காக வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதுபோல் வாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# கட்டி முடிக்கப்படாத வைத்தியசாலை

2009 இல் நிறைவு பெறவேண்டிய பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சிறுவர் வைத்தியசாலை வேலைகள் இன்னும் நிறைவு பெறாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையின் முதல் கட்டப் பணிகள் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாம் கட்டம் 2007ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2009 இல் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக வைத்திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் சந்திக எப்பிடகட்டுவ குறிப்பிட்டார். எனினும் இன்றுவரை இரண்டாம் கட்டப்பணிகள் நிறைவடையவில்லை என சங்கம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது உள்ள ஸ்கானர் இயந்திரம் கூட பழுதடைந்துள்ளதாகவும் இவ்வைத்தியசாலை மூலம் நன்மை பெற சரியான நிர்வாகம் அமைய வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



சகல கட்சிகளிலும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான புது வருட ஒன்றுகூடல் நிகழ்விலும் மதிய போசன விருந்திலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் வீட்டில் இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சுமுகமாகக் கலந்துரையாடினார்.

# இளம் பெண் சடலமாக மீட்பு

இணுவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மீசாலைப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகமூர்த்தி ஜெசீலா (வயது-21) என்ற பெண்ணே நேற்று முன்தினமிரவுசடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.